வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 05.02.2024 திங்கட்கிழமை | இதழ் : 36 | பக்கங்கள் : 12







### சுதந்திர தினத்துக்கு எதிராக

# கிளிநொச்சியில் மாணவர்கள் தடைகளை மீறிப் போராட்டம்!

- போராட்டக்காரர்கள் மீது தடியடி
- கண்ணீர்புகைக் குண்டுகள் வீச்சு
- 5 பேருக்கு கைதின் பின்னர் பிணை



கிளிநொச்சி, பெப்ரவரி 05

**யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் மீது பொலிஸார் தடியடி நடத்தியதுடன் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீரை விசிறி அடித்தும் தாக்கினர். அத்துடன், 5 மாணவர்களை கைதுசெய்தனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.**

நாட்டின் சுதந்திர நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் என்பன அழைப்பு விடுத்திருந்தன. அத்துடன், கிளிநொச்சியில் பேரணிக்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு தடை விதிக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றில் தடை கோரப்பட்ட நிலையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் உட்பட ஐந்து பேருக்கு எதிராக தடை உத்தரவை பொலிஸார் பெற்றனர்.

நேற்று காலை 9 மணியளவில் இரணைமடு சந்தியில் போராட்டம் ஆரம்பமானது. கிளிநொச்சி நகரை நோக்கிப் போராட்டம் நகர ஆரம்பித்தது. ஆனால், போராட்டம் ஆரம்பித்த இடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

தடைவேலிகள் அமைக்கப்பட்ட இடத்தைப் பேரணி அடைந்ததும் அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு

11

# வடக்கு, கிழக்கில் கரிநாள் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப்.05

சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து நேற்று வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதான போராட்டம் கிளிநொச்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இரணைமடு சந்தியில் ஆரம்பித்த போராட்டம் சிறிது தூரத்திலேயே பொலிஸாரால் தடுக்கப்பட்டு கலைக்கப்பட்டது. இதன்போது 5 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

11

# எம் தாய்நிலம் விடிவுறும் நாளே தமிழர் எமக்கு சுதந்திர நாள்!

### வடக்கு - கிழக்கு பல்கலை. மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், பெப். 05

எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே தமிழர் எமக்கு சுதந்திர நாள் என்று வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று அந்த அமைப்பு விடுத்த ஊடக அறிக்கையின் முக்கிய விவரங்கள் வருமாறு,

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்பு கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் என்பவற்றின் ஊடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாக பலமுறை வெளிப்படுத்தப்பட்ட

11

# இலங்கையுடனான கடல்சார் பொருளாதாரம் வலுவாக்கப்படும்!

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 05

இலங்கையுடன் கடல்சார் பொருளாதார உறவுகளை அமெரிக்கா மேலும் வலுவாக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி இலங்கை மக்களுக்கான வாழ்த்துச்செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வலுவான கூட்டு என்பது பகிரப்பட்ட விழுமியங்கள் ஜனநாயகத்துக்கான அர்ப்பணிப்பு சுதந்திரமான வெளிப் படையான பாதுகாப்பான இந்தோ - பசுபிக் போன்ற வற்றை அடிப்படையாக

11

# காலிமுகத்திடலில் நேற்று சுதந்திர தின கொண்டாட்டம்!

கொழும்பு, பெப். 05

76 ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் “புதிய தேசம் அமைப்போம்” எனும் தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு காலி முகத்திடலில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

11



## தமிழிலும் தேசிய கீதம்!

கொழும்பு, பெப். 05

நாட்டின் 76ஆவது தேசிய சுதந்திர விழா காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்றபோது தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஆரம்பத்தில் சிங்கள மொழியில்

11

# 106 புற்றுநோயாளர்கள் தினமும் அடையாளம்!

கொழும்பு, பெப். 05

நாட்டில் நாளாந்தம் சராசரியாக 106 புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர் என்று புற்றுநோய் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உலக புற்றுநோய் தினமான நேற்று அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், கடந்த 3 தசாப்தங்களில் உலகெங்கிலும் 50 வயதுக்கு உட்பட்டவர்களிடையே புதிதாகப் பதிவாகியுள்ள புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 80 சதவீதம் அதிகரித்துள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

சுதந்திர தின நிகழ்வு

# இந்தியா, அமெரிக்க, ஐரோப்பிய தூதுவர்கள் பங்கேற்கவில்லை!

கொழும்பு, பெப். 05

நாட்டின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கொழும்பிலுள்ள அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூவர்களும் இந்திய தூதுவரும் பங்குபற்றவில்லை.

இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையா அல்லது அழைப்பு விடுக்கப்பட்டும் அவர்கள் பங்கேற்கவில்லையா என்பதை

11

# ஈழத்தை அழிக்கச் செய்யப்பட்ட உலக அரசியல் பேசப்படவில்லை

### திருமாவளவன் எம். பி. தெரிவிப்பு

சென்னை, பெப். 05

தமிழீழம் அழிந்ததற்கு தி. மு. கவை மட்டும் குறை கூறுகிறார்கள் ஆனால், உலகளவில் ஈழத்தை அழிக்க செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

அத்துடன், இந்தியாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டம்கூட நடைபெறவில்லை. உலக நாடுகள் ஈழத் தமிழர்களை

11

# இப்படியும் நடக்கிறது

சிறீ லங்காவின் எழுபத்தியாறாவது சுதந்திர தினம் நேற்று இலங்கையின் பல்வேறு இடங்களிலும் கொண்டாடப்பட்ட அதேவேளை, வடக்கு கிழக்கில் தமிழர்களால் கரிநாளாக நினைவு கூரப்பட்டிருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த இந்த எழுபத்தியாறு ஆண்டுகளில் ஒரு சில ஆண்டுகள் தவிர்ந்து தமிழர்கள் இந்த நாளை கரிநாளாக - துக்கநாளாகவே அனுஷ்டித்து வருகின்றனர்.

‘இடையில் கொஞ்சப்பக்கத்தைக் காணோம்’ என்பதுபோல, நல்லாட்சி காலத்தில் சுதந்திர தின கொண்டாட்டங்களில் நமது தலைவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருந்து கொண்டாடி மகிழ்ந்ததையும் நாம் கடந்து வந்திருக்கின்றோம்.

சுதந்திரம் என்பது இந்த நாட்டில் அனைத்து இனத்தவர்களுக்கும் முழுமையாக கிடைத்துவிடவில்லை என்பதை தெரிவிப்பதற்காகவே - குறிப்பாக, தமிழ் மக்கள் இன்னமும் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுவிடவில்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் சொல்வதற்காகவே இதனை கரிநாளாக - துக்க நாளாக தமிழர்கள் தொடர்ந்து அனுஷ்டித்து வருகின்றனர்.

இவர்களின் இந்தப் போராட்டம் நியாயமானதுதான் என்பதையே நேற்று வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் உணர்த்தியிருக்கின்றன.

நேற்றைய தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி அன்று பல்வேறு போராட்டங்களுக்கும் அழைப்பு விடுத்தவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள். அந்த வகையில் நேற்று அவர்கள் கிளிநொச்சியில் நடத்திய கண்டனப் பேரணியை தடுத்த நிறுத்திய கிளிநொச்சி பொலிஸார் மிகவும் கடுமையாக நடந்துகொண்டதோடு மாணவர்கள் சிலரையும் கைதுசெய்திருந்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசு கட்சியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தாக்குதலுக்கு உள்ளானரெனவும் சில செய்திகள் தெரிவித்திருந்தன.

ஆனால், இதேவேளை கொழும்பிலிருந்து வந்திருந்த முன்னாள் அமைச்சரும், தீவிர சிங்கள இனவாத அரசியலை முன்னெடுப்பவருமான சரத் வீரசேகர மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத் உட்பட்ட சிலர் யாழ்ப்பாணத்தில் சுதந்திர தினத்துக்கு ஆதரவாக தேசியக் கொடிகளுடன் ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர். இதற்காகவே கொழும்பிலிருந்தும் தெற்கிலிருந்தும் அழைத்து வரப்பட்டவர்களுடன் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதுடன் உள்ளூரிலிருந்தும் சிலர் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

தெற்கிலிருந்து வந்து யாழ்ப்பாண வீதிகளில் ஊர்வலம் போகின்ற சுதந்திரம் அவர்களுக்கு இருக்கின்றது என்பதை அவர்கள் பறைசாற்றிய அதேவேளை, தமிழர்கள் இந்த மண்ணில் தமது விருப்பத்துக்கு ஏற்ப ஊர்வலம் நடத்துவதற்கான சுதந்திரம் இன்னமும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதையே அவர்கள் உறுதிசெய்திருக்கின்றனர்.

அதுவல்ல, நேற்றைய சம்பவங்களை பார்த்தபோது எமக்கு உறுத்தியது இன்னுமொரு முக்கிய விவகாரம்தான்.

தமிழர்கள் தரப்பில் இந்த சுதந்திர தின எதிர்ப்புப் போராட்டங்கள் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றபோதிலும், அதிலும் முக்கிய அரசியல் கட்சியான தமிழ் அரசுக்கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்தப் போராட்டங்களுக்கு - அதாவது பல்கலைக்கழக மாணவர்கள் சங்கமும், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களும் இணைந்து நடத்திய இந்த போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியபோதிலும், ஆங்காங்கே ஒருசில தமிழ் மக்களே அவற்றில் கலந்துகொண்டதைக் காண முடிந்தது.

ஆனால், தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சுதந்திர தின ஊர்வலம் நடத்தியவர்களின் ஊர்வலத்தில் சில நூறு பேரையாவது காணமுடிந்தது.

உண்மையான சுதந்திரத்தை வேண்டிநிற்கும் ஓர் இனம், நடத்துகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள அந்த இனத்தவர்கள் ஆர்வம் காட்டாமல் இருக்க -

எமது இனத்தின் போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் ஊர்வலங்களில் அதிகளவானவர்கள் கலந்துகொள்வது- நெருடலை ஏற்படுத்துகின்றது.

இதுபோன்ற போராட்டங்களை ஏற்பாடு செய்பவர்கள் தமது தவறுகள் எங்கே இருக்கின்றது என்பதைக் கண்டறிய வேண்டியது அவசியமானது.

போராட்டங்கள் - அரசியல் கூட்டங்களுக்கு மக்களைக் கொண்டுவருவதும், சாதாரணமான விடயமல்ல. அதனை ஏற்பாடு செய்பவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று மரணச் சடங்குகளில் ஆட்களைச் சேர்ப்பதற்கும் அதிகம் ஏன், உறவினர்கள் போல அங்கிருந்து அழுவதற்கும்கூட பணம்கொடுத்து ஆட்களைப் பிடிக்க வேண்டியிருக்கின்றது. அதனை ஏற்பாடு செய்து கொடுப்பதற்காகவே சில நிறுவனங்களே இயங்கிக்கொண்டிருக்கிக்கின்றன.

இதுபோன்ற போராட்டங்களுக்கு ஏற்பாடு செய்பவர்கள் களநிலைமைகளை கருத்தில் கொண்டு அதனை ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையெனில் நமது போராட்டங்கள் பயனற்றவையாகவே நடந்து முடியும்!

**- ஊர்க்குருவி.**

## 76ஆவது சுதந்திர தின விழாவின் பதிவுகள்












## கிளிநொச்சியில் கரிநாள் போராட்ட பதிவுகள்








ஈழநாடு
Eelanadu
05.02.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், தை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ஒரு சின்னத்தில் இணைதல்

‘முதல் கோணல் முற்றிலும் கோணல்’ என்பது போல் - இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் கட்சியை முன்கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார். அந்தளவுக்கு உள்முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆனால், அவர் தலைவராகத் தெரிவானதைத் தொடர்ந்து 2009இற்கு முன்னரான கூட்டமைப்பை உருவாக்கப் போகிறாரெனவும் அந்த முயற்சியில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறும் அறிவித்திருந்தார். ஆனால், தற்போதுள்ள நிலைமையில் அவ்வாறானதொரு தீர்மானத்துக்கு அவர் வரவேண்டுமாயின், அதற்கும் கட்சிக்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் ‘குத்துவிளக்கு’ சின்னத்தில் ஒன்றிணைந்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் அரசு கட்சியையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதற்காக எவ்வாறான விட்டுக் கொடுப்புகளையும் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தமிழ் அரசு கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தை பொதுச் சின்னமாக மாற்றினாலும் அதனை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். ஆனால், எல்லாவற்றுக்கும் முன்னால் குத்துவிளக்கு கூட்டின் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் குறிப்பிடுவதுபோன்று முதலில் தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் கடந்த பதினான்கு வருடங்களாக சில உச்சரிப்புக்களோடும் அவ்வப்போது தனித்தும் - சேர்ந்தும் சில - பல வெளிநாட்டு பயணங்களாகவும் அந்த பயணங்கள்மீதான அதீத நம்பிக்கைகளை மக்களுக்கு சொல்வதாகவும் தேர்தல் கால வாக்குறுதிகளாகவுமே தமிழ்த் தேசியம் என்னும் பெயரிலான அரசியல் நகர்ந்திருக்கின்றது. இந்த நகர்வின்போது சொல்லிக்கொள்ளும் படி எந்தவோர் அடைவையும் எவருமே காண்பிக்கவில்லை. இந்த நிலையில் தோல்வியடைந்த கட்சி ஒன்றுக்கு யார் தலைவராவது என்னும் அடிப்படையிலான போட்டிதான் இடம்பெற்றது. அதற்கு செயலாளராக யாரை நியமிப்பது என்னும் அடிப்படையில்தான் பிரச்னைகள் தீவிரமடைந்திருக்கின்றன.

இதே போன்று, தோற்றுப் போன கட்சிகள் அனைத்தும் இணைந்துதான் குத்துவிளக்கு கூட்டணியாக செயல்பட்டு வருகின்றனர். மறுபுறம் இணக்க அரசியலின் முன்னோடியான ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கட்சியைக் கொண்டு புதிய பாதை ஒன்றை உருவாக்கப் போவதாக அவரின் பேரன் கூறிக்கொண்டிருக்கின்றார்.

மொத்தத்தில், கடந்த முக்கால் நூற்றாண்டுகால தோல்வியின் பிரதிநிதிகள்தான் தற்போதும் அரசியலுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் முன்னைய வழிமுறைகள் எவையுமே வெற்றிக்கான வழியை காண்பிக்கவில்லை என்பதால்தானே தோல்வி ஏற்பட்டது. - இந்த நிலையில் தோல்வியின் காரணங்களை புரிந்துகொண்டு, அதற்கேற்ப புதிய அரசியல் பாதையொன்றை கண்டுபிடிக்க வேண்டும். வெறும் சுலோகங்களை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க முடியாது. கடந்த பதினான்கு வருடகால அரசியல் அனுபவங்கள் அதனைத் தெளிவாக படம்பிடித்துக் காண்பித்திருக்கின்றன.

உலக அரசியல் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்களோ தமிழ் மக்களுக்கு சாதகமான சூழலை சிறியளவில்கூட காண்பிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னிறுத்தும் கட்சிகள் தங்களை பண்பு மாற்றமொன்றுக்கு தயார் செய்ய வேண்டும். கொள்கை நிலைப்பாடு ஒன்றை பேணிப் பாதுகாப்பதில் பிரச்னையில்லை. ஆனால், கொள்கையை கருங்கல் பாறை போன்று எண்ணிக்கொண்டு செயலாற்றக்கூடாது. இந்தப் பின்புலத்தில் அவ்வாறானதொரு பண்பு மாற்றத்தின் ஆரம்பமாக அனைத்து தரப்பினரும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் இணைவது காலத்துக்குத் தேவையானதுதான். இங்கு சின்னம் பிரச்னையல்ல - மாறாக பண்பு மாற்றமே தேவையானது.

# வீண்விரய செலவினங்களை மக்கள் தவிர்க்க வேண்டும்!



## யாழ். மாவட்ட அரச அதிபர்

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் அன்றாட வீண்விரய செலவினங்களை தவிர்க்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணன் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

நாட்டின் 76 ஆவது சுதந்திர தின விழா நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் கொண்டாடப்பட்டது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக கொரோனா தொற்று நோய் எற்பட்டிருந்தது. அதில் பல உயிரிழப்புக்களும் மனிதர்களின் மனங்களிலும் கஷ்ட சூழ்நிலை காணப்பட்டது. மேலும், பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது. எனவே, இதனை கடந்து வந்த எமது அரசாங்கம் புதிய உத்திகளுடனான திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், உணவு உற்பத்தியிலும் ஏற்றுமதி விவசயத்திலும் முன்னேற்றம் காண வேண்டியதாக இருக்கின்றது. பாரம்பரிய சிறுதானிய உற்பத்தியிலும் உள்ளூர் உணவுப் பொருட்கள் மேம்படுத்தவேண்டும். ஏற்றுமதியில் நவீன மாயக்கும் சிந்தனையாளர்களாக வளர்க்கவேண்டும்.

எனவே, எமது நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தில் இருந்து 77 ஆவது சுதந்திர தினத்திலாவது இத்திட்டங்கள் அனைத்தும் கிராம மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே இலக்கு அதன் ஊடாக ஒரு சுபீட்சமான வாழ்க்கையை காணமுடியும் - என்றார். (ஐ)

# யாழ். ஆவா குழு தலைவர் கொழும்பில் கைதானார்!

கொழும்பு, பெப். 05

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த ‘ஆவா’ என்று கூறப்படும் வன்முறை குழுவின் தலைவர் என்று கூறப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - கல்கிசை பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் வைத்து அவரை குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நபர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் மறைந்திருந்த போதே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# போதையில் மருத்துவமனையின் மதில் பாய்ந்த இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ். போதனா மருத்துவமனையில் மது போதையில் அத்துமீறி நுழைய முற்பட்ட இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதிலால் ஏறி மது போதையில் போதனா மருத்துவமனைக்கு உட்புகுந்த இருவரை மருத்துவமனையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# கொள்ளுப்பிட்டி வீதிகள் மார்ச் 11 வரை மூடப்படும்

கொழும்பு, பெப். 05


கொள்ளுப்பிட்டி கொம்பனி தெரு பொலிஸ் பிரிவுகளில் உள்ள உத்தரானந்த மாவத்தை, பெரஹர மாவத்தை மற்றும் நவம் மாவத்தை, நீர் வெளியேறும் குழாய் அமைக்கப் படுவதால் தற்காலிகமாக மூடப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த கழிவு நீர் வெளியேற்றப்படும் குழாய் கொழும்பு துறைமுக நகரத்துடன் இணைக்கப்படும் எனவும், உத்தரானந்த மாவத்தை, பெரஹர மாவத்தை மற்றும் நவம் மாவத்தையில் வசிப்பவர்கள் வீதியை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்படி, உத்தரானந்த மாவத்தை, நவம் மாவத்தையில் இருந்து புகையிரத கடவை வரையான பகுதி இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை மூடப்படும்.

இதேபோன்று, உத்தரானந்த மாவத்தை, பெரஹர மாவத்தை முதல் நவம் மாவத்தை வரையிலான பகுதி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் மார்ச் 4ஆம் திகதி வரையிலும் மூடப்படும். உத்தரானந்த மாவத்தை, பெரஹர மாவத்தை, றொட்டுண்டா தோட்டம் சந்தி வரையான பகுதி மார்ச் 5ஆம் திகதி முதல் மார்ச் 11ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளன. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளா தீர்கள். வளைந்து கொடுத்துப்போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள் வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ் வீர்கள். உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர் கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள் வீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக் கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டி களை சமாளிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர் கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உத்தி யோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கைமாற் றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர் கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப் பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தி யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப் பீர்கள். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோ ரின் ஆதரவு பெருகும்.வியாபாரத்தை பெருக்குவீர் கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும். நினைத்ததை முடிப்பீர்.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். மரியாதைக் கூடும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பண வரவு உண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

# 13 இலட்சம் பேருடன் பொதுக்கூட்டம் தயாராகி வருகின்றது தமிழக பா. ஜ. க.!

திருப்பூர், பெப். 05

தமிழகத்தில் 13 இலட்சம் பேரை திரட்டி பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு பா. ஜ. க. தயாராகி வருகிறது. 25ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை 'என் மண்,என் மக்கள்' பாத யாத்திரை நிறைவு விழா பொதுக்கூட்டம் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் வருகிற 25ஆம் திகதி நடக்கிறது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று பேசவுள்ளார். இது குறித்து பா. ஜ. க., மாநில பொது செயலாளர் முருகானந்தம் திருப்பூரில் கூறியவை வருமாறு,

மாநில பா. ஜ. க., தலைவர் அண்ணாமலையின் பாத யாத்திரை இதுவரை 180 தொகுதிகளில் முடிந்துள்ளது. மீதமுள்ள 54 தொகுதிகளையும், பல்லடத்தில் நடக்கும் நிறைவு விழாவுக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம். யாத்திரைக்கு மக்களிடத்தில் குறிப்பாக பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

நிறைவு விழா பிரமாண்டமாக வருகிற 25ஆம் திகதி பல்லடத்தில் நடக்கிறது. கட்சியினர் 10 இலட்சம் பேர், பொதுமக்கள் 3 இலட்சம் பேர் என 13 இலட்சம் பேர் கலந்துகொள்ள இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த பொதுக்கூட்டம் தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும். 400 ஏக்கர் பரப்பளவில் கூட்டம் நடைபெற உள்ளது. வாகனங்களை நிறுத்த 600 ஏக்கர் மற்றும் மக்கள் வந்து செல்வதற்காக 300 ஏக்கர் என ஆயிரத்து 300 ஏக்கர் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் நடக்கின்றன.

தமிழகம் மட்டுமல்ல இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் இந்த யாத்திரையின் நிறைவு பொதுக்கூட்டம் இருக்கும் என நினைக்கிறோம். 25ஆம் திகதி மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி மற்றும் பா. ஜ. க. தேசிய தலைவர்கள் பங்கேற்று பேசவுள்ளனர் - என்றார். (ஐ)

# முதல்வர் ஸ்டாலினுடன் விவாதத்துக்கு நான் தயார்!

## அண்ணாமலை அறிவிப்பு

வேலூர், பெப். 05

தி. மு. க. தலைவர் முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் நான் பகிரங்க விவாதத்துக்கு தயாராக உள்ளேன் என்று கூறியுள்ளார் தமிழ்நாடு பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை.

பீகாரை விட தமிழகத்தின் இராமேஸ்வரம் உட்பட பல மாவட்ட மக்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளதாக தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலையின் குற்றச்சாட்டுக்கு பதில் அளித்தார்.

அண்ணாமலைக்கு தைரியம் உள்ளதா?. அவருக்கு தைரியம் இருந்தால் மனிதவள மேம்பாட்டு குறியீட்டு அறிக்கையை வைத்து, தமிழகத்தின் ஒரு குக்கிராமமோ அல்லது மலை வாழ் பகுதி கூட உதாரணமாக வைத்து என்னோடு பொது மேடையில் விவாதிக்கட்டும். அதற்கு அண்ணாமலைக்கு தைரியம் உள்ளதா?, யோக்கியம் உள்ளதா?. நான் தயாராக உள்ளேன். மேலும் மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் தமிழகத்தை ஒப்பிட பா.ஜ.க. ஆளும் எந்த மாநிலத்துக்கும் தகுதி இல்லை என்று கூறினார்.

இந்தப் பேச்சு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அண்ணாமலை கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், அமைச்சர் மனோ தங்கராஜ் விவாதிக்க வருகிறார் என்றால், நான் எங்களின் பா.ஜ.க. செய்தி தொடர்பாளரை அனுப்பி வைக்கிறேன். விவாதிப்பதற்கான இடத்தையும் நேரத்தையும் மனோ தங்கராஜ் முடிவு செய்யட்டும். மனோ தங்கராஜ் வருவதாக இருந்தால் எங்களின் செய்தி தொடர்பாளர்தான் வருவார். எங்கள் கட்சியின் செய்தி தொடர்பாளர் எப்போது வேண்டுமானாலும் பேசுவார்.

அவர்களின் தலைவர் மு.க. ஸ்டாலின் வருவதாக இருந்தால் பா. ஜ. க. தலைவரான நான் வருகிறேன் - அதற்கு நான் தயாராக உள்ளேன்.

இதுவரை எந்தத் தலைவரும் வெளிநாட்டுக்கு 10 நாள் சுற்றுலா போய் பார்த்ததில்லை. ஸ்டாலின் 10 நாட்கள் ஸ்பெயின் சென்றிருந்தார். நம்மை முட்டாள்கள் என தி.மு.க. நினைத்துக் கொண்டிருக்கிறது.

தற்போது உருவாகியுள்ள இந்தியா கூட்டணியில் அனைவரும் ஊழல்வாதிகள். இதில் முக்கிய ஊழல்வாதிகள் உள்ள இந்த கூட்டணியில் இருந்து ஒவ்வொருவராக வெளியே வருகின்றனர். சிலர் கைதாகிறார்கள். இதற்கு தமிழகத்தில் அமர்ந்து கொண்டு ஸ்டாலின் ஏன் பதறுகிறார் என்று தெரியவில்லை.

தி.மு.க.வின் டெல்லி ஆசை நிராசையாக தான் இருக்கும். 2024-ம் ஆண்டு தேர்தல் முடிவுகளை பாருங்கள். இந்த முறை மக்கள் முடிவு செய்து விட்டார்கள் தனி பெரும்பான்மையுடன் பாரதிய ஜனதா கட்சியை 400 எம். பிகளுக்கு தாண்டி அமர வைப்பார்கள் - என்றார். (ஐ)

# சசிகலா - ஓ. பி. எஸ். சந்தித்துப் பேச்சு!

சென்னை, பெப். 05

சென்னை மெரினாவில் அண்ணா நினைவிடத்தில் நேற்றுமுன்தினம் மரியாதை செலுத்த வந்த சசிகலாவும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் சந்தித்து பேசியுள்ளனர்.

இருவரின் சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சந்திப்பு தொடர்பாக பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறும்போது, "இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு தான். அ. தி. மு. கவினர் அனைவரும் ஒன்றிணைந்தால் தேர்தலில் அ. தி. மு. கவுக்கு வெற்றி உறுதி" என்றார்.

பின்னர் சசிகலா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாங்கள் எப்போதுமே மக்களை நம்பி இருப்பவர்கள். நிச்சயம் மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து காட்டுவோம். அ. தி. மு. கவை ஒருங்கிணைக்கும் பணி எல்லாம் நல்லபடியாக நடந்துகொண்டிருக்கிறது. பன்னீர்செல்வம் எங்கள் குடும்பத்தில் ஒருவர்தான். எங்கள் கட்சியினரை எதிரில் வரும்போது பார்த்து பேசினேன் - என்றார். (ஐ)

-இலங்கையிலிருந்து -

# கடத்தப்பட்ட 4. 3 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது!

இராமேஸ்வரம், பெப். 05

இராமேஸ்வரம் அருகே இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட 4.36 கிலோ தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, குந்துகால் கடல் பகுதி வழியாக இலங்கையில் இருந்து தங்கம் கடத்தி வந்தவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4.36 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இதுகுறித்து சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

ஈழநாடு



# யாழ். பல்கலைக்கழகத்தில் பறந்தன கறுப்பு கொடிகள்!





யாழ்ப்பாணம், பெப். 05

**சுதந்திர தினத்தை கரி நாளாக நினைவுகூரும் வகையில் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கொடிக் கம்பத்தில் கறுப்பு கொடி ஏற்றப்பட்டது. அத்துடன், பல்கலைக்கழக சூழலிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.**

நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை தமிழர் பிரதேசங்களில் கரி நாளாக வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக கொடிகம்பத்தில் மாணவர்களால் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது. அத்துடன், பல்கலைக்கழக சூழலில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (ஐ)



# சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 76ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் ஆரம்பமான இந்தப் பேரணி மருத்துவமனை வீதியூடாக வீரசிங்கம் மண்டபத்தை அடைந்து நிறைவுற்றது.

இதில், பங்கேற்றவர்கள் தேசிய கொடிகளை கைகளில் ஏந்தியவாறு நடந்தனர். அத்துடன், மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கர வண்களும் இந்தப் பேரணியில் பங்கேற்றன.

மூவினத்தை சேர்ந்தவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்றனர். அத்துடன், அரச ஆதரவு கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர். (ஐ)

# வெளிநாடு அனுப்புவதாக மோசடி; இடைத் தரகரான பெண் கைது!

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 55 இலட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்ட கொழும்பை சேர்ந்த நபர் ஒருவருக்கு இடைத்தரகாக செயல்பட்ட பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடு செல்லும் ஆசையில் குறித்த பெண்ணின் ஊடாகவும், முகவருக்கு நேரடியாகவும் பாதிக்கப்பட்ட நபர் 55 இலட்ச ரூபாயை கட்டம் கட்டமாக வழங்கியுள்ளார்.

நீண்ட காலமாகியும் தன்னை வெளிநாடு அனுப்பாததால் கொழும்பு முகவருடன் பாதிக்கப்பட்ட இளைஞன் தொலைபேசி ஊடாக முரண்பட்டதை அடுத்து முகவர் இளைஞனின் தொடர்பை துண்டித்துள்ளார்.

இதனை அடுத்து இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் இதையடுத்து பாதிக்கப்பட்ட இளைஞனுக்கும் கொழும்பு முகவருக்கும் இடைத்தரகராக செயல்பட்ட பெண்ணை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை கொழும்பு முகவரை அடையாளம் கண்டுள்ளனர் என்றும் தலைமறைவாகியுள்ள அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# பெண்ணிடம் தாலிக்கொடியை வாங்கி ஏமாற்றிய யுவதி கைது!

யாழ்ப்பாணம், பெப். 05

வாய் பேச முடியாத பெண்ணிடம் 21 பவுண் தாலிக் கொடியை இரவலாக வாங்கி மோசடி செய்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சுன்னாகம் பொலிஸ் எல்லைக்குள் வசிக்கும் வாய் பேச முடியாத பெண்ணொருவரிடம் அயலவரான யுவதி ஒருவர் கொண்டாட்டங்களுக்கு செல்லும் போது தாலிக்கொடியை இரவலாக பெற்று அணிந்து சென்ற பின்னர் அதனை மீள அப்பெண்ணிடம் வழங்குவது வழமையாக இருந்தது.

இந்நிலையில் அண்மையில் வழமை போன்று தாலிக் கொடியை இரவலாக வாங்கி சென்ற யுவதி, அதனை திருப்பி கொடுத்த போது , கொடியின் அமைப்பில் வித்தியாசத்தை உணர்ந்துள்ளார். இதையடுத்து அவர் அதனை நகைக்கடையில் கொடுத்து பரிசோதித்தபோது , அது போலியானது (கவரிங்) என தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தப் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் அந்தப் பெண்ணின் அயலவரான யுவதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது , சுன்னாகம் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் இரவலாக பெற்ற தாலிக் கொடியை விற்று விட்டு அதே போன்று போலி தாலிக் கொடியை (கவரிங்) செய்து , அதனை அப்பெண்ணிடம் கொடுத்தமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# இராணுவம் - பொதுமக்கள் கட்டைக்காட்டில் சிரமதானம்!

வடமராட்சி, பெப். 05

சுதந்திர தினமான நேற்று வடமராட்சி கிழக்கு கட்டைக் காட்டில் இராணுவத்தினருடன் இணைந்து பொதுமக்கள் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

552 ஆவது படைப்பிரிவை சேர்ந்தவர்கள் நேற்று இந்த சிரமதானத்தை முன்னெடுத்தனர்.

அவர்களுடன் கிராம அலுவலர், சென். மேரிஸ் கடற்றொழிலாளர் சங்கம், சமுர்த்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை ஒட்டியே இந்த சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (ஐ-02)

# மது அருந்திவிட்டு மனைவி தகராறு!

## விவாகரத்து கோரினார் கணவன்

யாழ்ப்பாணம், பெப். 06

தனது மனைவி மது அருந்திவிட்டு தகராறில் ஈடுபடுகிறார் என்றும் இதனால் தனக்கு விவாகரத்து வேண்டும் என்றும் கூறி கணவர் யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பணம், கொக்குவிலை சேர்ந்தவரே இவ்வாறு விவாகரத்து கோரி சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

இருவரும் திருமணமாகி 4 மாதங்கள் கடந்த நிலையில் மது அருந்தி விட்டு வந்துள்ளார். மனைவிக்கு மது அருந்தும் பழக்கமிருப்பது திருமணத்தின் பின்னரே தனக்கு தெரிய வந்ததாகவும் இதனால் தனது சமூக அந்தஸ்து பாதிக்கப்பட்டதாகவும் மனைவி மது போதையில் வீட்டில் தகராறில் ஈடுபடுவதால் தனது வயதான பெற்றோர் மனஉளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்றும் விவாகரத்து மனுவில் கணவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனைவி மது அருந்துவது குறித்து அவருடன் பேசிய போது,

இது குறித்து மனைவியுடன் பேசி இணக்கப்பாடு எட்ட முயன்றபோதும் மது அருந்துவது தனது தனிப்பட்ட உரிமையென்றும் அதில் தலையிட வேண்டாம் என்று கூறிவிட்டார் எனவும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விவாகரத்து கோரியவரின் மனைவி கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர் என்று கூறப்படுகின்றது. (ஐ)



# நெடுந்தீவு கடலில் 23 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 05

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 23 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 2 படகுகளையும் அதிலிருந்த 23 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு இப்போதே சுதந்திரம் கிடைத்தாம்

## யாழ். வந்த சரத் வீரசேகர சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 05

**யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு இன்றுதான் (நேற்று) சுதந்திரம் கிடைத்த நாளாக இருக்கும் என்று கூறியுள்ளார் பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.**



நேற்றைய தினம் சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்று நடைபெற்றது. வெளிமாவட்டங்களிலிருந்தும் அழைத்து வரப்பட்ட சில நூறு பேருடன் இடம்பெற்ற இந்தப் பேரணியில் பங்கேற்ற பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தை சந்தோசமாக கொண்டாடி வருகின்றமை அனைவரும் அறிந்த விடயம். இதேபோல் இந்த வருடம் யாழ்ப்பாண நகரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தேசிய கொடியினை ஏந்தியவாறு இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியமை வரவேற்கத்தக்க விடயம்.

நான் நினைக்கின்றேன் இன்றுதான் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்த நாளாக இருக்கும் என்று. அதாவது பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக சுதந்திர தினத்தை கொண்டாடியதை நான் நேரில் பார்வையிட்டேன்.

இதுதான் உண்மையான நல்லிணக்கம். வடக்கில் தற்போது பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மக்கள் நிம்மதியாக சுதந்திர தினத்தை கொண்டாடியதை நான் வரவேற்கிறேன் - என்று அவர் கூறியுள்ளார். (ஐ)



# 76ஆவது சுதந்திர தின நாளில் கட்டைக்காட்டில் மரநடுகை!

வடமராட்சி, பெப். 05

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினமான நேற்று வடமராட்சி கிழக்கில் மரநடுகை நடைபெற்றது.

கட்டைக்காடு - முள்ளியான் கிராம அலுவலர் பணிமனையிலேயே மரநடுகை மேற்கொள்ளப்பட்டது.

முள்ளியான் கிராம அலுவலர் கி. சுபகுமார் தலைமையில் காலை 08.30 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முள்ளியான் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து மரக் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (ஐ-02)

# யாழ்ப்பாணம் சிறையிலிருந்து 22 கைதிகள் நேற்று விடுதலை!

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 22 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 600ற்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த இருந்து 22 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வீடுகளுக்கு வழியனுப்பி வைத்தனர். (ஐ)

# கடற்படை வாகனம் மோதியதில் காயமடைந்த மாணவன் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 05

கடற்படையின் வாகனம் மோதிய விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மாணவன் நேற்று உயிரிழந்தார்.

மன்னார், மறிச்சுக்கட்டியைச் சேர்ந்த முஹமட் முத்திஹம் சாத் (வயது - 19) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 31ஆம் திகதி சிலாவத்துறையில், மோட்டார் சைக்கிளில் மாணவன் சென்றுள்ளார். அந்தசமயம் எதிரே வந்த கடற்படை வாகனம் திடீரென வலப்பக்கம் திரும்பியதால் விபத்தில் சிக்கினார்.

இதில் படுகாயமடைந்த மாணவன் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டர். இங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மருதங்கேணி பிரதேச செயலகத்தில் சுதந்திரதின நிகழ்வும் மரநடுகையும்



வடமராட்சி, பெப். 05

நாட்டின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வு மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) பிரதேச செயலகத்தில் கொண்டாடப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.27 மணிக்கு பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தியால் தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்தன.

பின்னர் பிரதேச செயலாளர், கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரால் மரநடுகையும் அலுவலக உத்தி யோகத்தர்களால் சிரமதான நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-02)

# 7 விடயங்களை வலியுறுத்தி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்தியது

முல்லைத்தீவு, பெப் 05

நாட்டின் சுதந்திர தினத்தை தமிழர் தேசத்தின் கரி நாளாக பிரகடனப்படுத்தி, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஏழு முக்கிய விடயங்களை வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி வேண்டும்”, “தமிழ் இனப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை”, “தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும்”, “பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்”, “தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்”, “தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே”, “இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வுவேண்டும்” ஆகிய ஏழு விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டன.

நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரிலான மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ் தரப்புடன் இணைந்து தயாரித்த புதிய ஏக்கிய ராஜ்ஜிய (ஒற்றையாட்சி) அரசியலமைப்பு வரைபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் இன அழிப்புக்கான நீதி, நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தும் பதாதைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களை புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுதந்திர தின விழாவில் நால்வர் மயங்கி வீழ்ந்தனர்!

வவுனியா, பெப். 05

வவுனியாவில் சுதந்திர தின விழாவில் பங்கேற்றிருந்த மாணவர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என நால்வர் மயங்கி விழுந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் இலங்கையின் 76வது சுதந்திர தின விழாநேற்று காலை நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்ட செயலர் பி. ஏ. சரத் சந்திர தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக குலசிங்கம் திலீபன் எம். பி. பங்கேற்றிருந்தார்.

அணிவகுப்பில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார் அணிவகுப்பு நிறைவடைந்த பின்னர் பிரதான நிகழ்வு மண்டபம் முன்பாக உள்ள மைதானத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மாணவர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மைதானத்தில் நின்றிருந்த நிலையில் மாணவர்கள் இருவரும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரும் மயங்கி விழுந்தனர்.

உடனடியாக அவர்களை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் முதலுதவி சிகிச்சை அளித்தனர். (ஐ)

# 13ஆம் திருத்தம் இருக்கும்வரை நிறைவேற்றதிகாரமும் தேவை

## சன்ன ஜயசுமண எம். பி. சொல்கிறார்

கொழும்பு, பெப். 05

**“அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் அமுலில் இருக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முற்பட்டால் அது ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தலாக அமையும்.” - என்று சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினரான சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“மாகாண சபைகளுக்கு தற்போது அதிகாரம் இல்லை, உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரம் இல்லை, ஏனெனில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை, தற்போது பிரதமர் ஆட்சிமுறை பற்றி பேசப்படுகின்றது, ஜனாதிபதி தேர்தலையும் நடத்தாமல் இருப்பதற்கான நகர்வா இது என்ற ஐயமும் ஏற்படுகின்றது.

இதேபோல பாராளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடித்துக்கொண்டு ஆட்சியை தொடர்வதற்கான திட்டமும் இதன் பின்னணியில் உள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

செப்ரெம்பர், ஒக்ரோபருக்கிடையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டியுள்ள நிலையில், ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றி யோசனைகள் முன்வைக்கப்படுவது, தேர்தலை இழுத்தடிப்பதற்கான நகர்வாகவே உள்ளது. இது பயங்கரமான நிலைமையை நாட்டில் ஏற்படுத்தக்கூடும்.

நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்பட்ட பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மறுசீரமைப்பு பற்றி சிந்திக்க வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை வைத்துக்கொண்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முற்பட்டால் ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். எனவே, தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை.” - என்றார். (ஐ)

# ஜனாதிபதியாக ரணில் பிரதமராக சந்திரிகா?

## புதிய கூட்டணி இப்படி சிந்தனை



கொழும்பு, பெப். 05

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமராக முன்வைத்து கூட்டணி நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாக தென்னிலங்கை தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் புதிய கூட்டணி ஒன்று தற்போது உருவாகியுள்ளது. இந்தப் புதிய கூட்டணி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு ஆதரவளிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகும் நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிரதமராக நியமிக்கப்படுவார் என்றும் தென்னிலங்கை தகவல்கள் கூறுகின்றன. எனினும், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் வெளியாகவில்லை.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பது தொடர்பில் தாம் இதுவரையில் உறுதியான தீர்மானத்தை எடுக்கவில்லை என சிறீ லங்கா சுதந்திர கட்சி அறிவித்துள்ளது. (ஐ)

# அரசாங்கம் வற் வரியை நீக்க வேண்டும்! எரிபொருள் நிலையங்கள் வலியுறுத்து

கொழும்பு, பெப். 05

எரிபொருள் கூட்டுத்தாபனமும் வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு அறவிடப்படும் 18 வீத வற் வரியை உடனடியாக நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரியை குறைக்க நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட வேண்டிவரும் எனவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் அரச அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

எரிபொருள் விற்பனையில் மூன்று சதவீதத்திற்கும் குறைவான கமிஷன் பெறுவதாகவும், அந்த கமிஷனில் 18 சதவீதத்தை வற் வரியாக செலுத்த வேண்டும் என்றும் சங்கம் கூறுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இந்த தொகையில் ஊழியர் சம்பளம், மின் கட்டணம், பராமரிப்புப் பணிகளுக்கான பணம் ஆகிய வற்றை ஒதுக்கிய பின்னர், இந்த தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளது. (ஐ)

# நான் ரணிலின் ஆதவராளனல்லன் அவரைவிட வேறு தெரிவும் இல்லை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, பெப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று கூறியதால் தன்னை அவரின் ஆதரவாளர் என்றும் கட்சியை உடைக்க தயாராகவுள்ளேன் எனவும் ராஜபக்சவினருக்கு எதிராக செயல்படுகிறேன் என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கிறேன் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவின் கட்டான மற்றும் திவுலப்பிட்டி பிரதேச சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளுடன் உடுகம்பளவில் உள்ள தனது வீட்டில் நடந்த சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவை தவிர நாட்டுக்கு மாற்று நபர் எவரும் இல்லை என்பதால், எனது மனசாட்சிக்கு இணங்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறேன்.

இது எந்த வகையிலும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்சவினருக்கு எதிரான நடவடிக்கையல்ல. நாடு பற்றி சிந்தித்தே நான் ரணில் விக்ரமசிங்கவுக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என கூறி வருகிறேன்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்த ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு மாற்று நபர் இருப்பார் எனில் யோசனையை முன்வைக்குமாறும் பிரசன்ன ரணதுங்க உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் அப்படியான மாற்று நபர் எவரும் இல்லை என அவர்கள் பதிலளித்துள்ளனர். (ஐ)

# வீட்டுக் காவலில் கைதிகள் சட்டம் விரைவில் அமுலாகும்!



கொழும்பு, பெப். 05

சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் வகையில் சிவில் குற்றங்களில் ஈடுபடும் அனைவரையும் வீட்டுக் காவலில் வைக்கும் திட்டம் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டங்களை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கான சட்ட வரைவு பிரிவால் உரிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இந்த வருடமே சட்டமாக்கப்படும் - என்றார்.

இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதன் மூலம் பிணை வழங்கல் புான்ற பல சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# மருந்து மோசடி விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும்!

## எதிர்க்கட்சி தலைவர் நம்பிக்கை

கொழும்பு, பெப். 05

மருந்து மோசடி விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காலி பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரத் துறையில் நடந்த பெரும் மோசடிகள் காரணமாக முன்னாள் சுகாதார அமைச்சர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கைக்கு நீதி நிலைநாட்டப்படும் நான் எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் கூறினார்.

மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட மேலும் சில தரமான மருந்துகளுக்குப் பதிலாகத் தரம் குறைந்த மருந்துகளை வழங்கியதால் நுவரெலியா மாவட்டத்தில் 20இற்கும் மேற்பட்டோர் பார்வை குறைபாடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டில் இந்தச் செயல்கள் குற்றவியல் கொள்ளைகளாகவே பார்க்கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்தக் கொள்ளைகளுக்கு இடமில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மது வரி உரிம கட்டணத்தை குறைத்தது நிதி அமைச்சு!

கொழும்பு, பெப். 05

வருடாந்த மதுவரி உரிமங்களுக்கு அறவிடப்படும் கட்டணத்தை மீண்டும் திருத்த நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, மதுவரி கட்டளைச் சட்டத்தின்படி, ஜனவரி 12ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மதுவரி உரிமக் கட்டணத்தை நிதி அமைச்சு திருத்தியுள்ளது.

புதிய விவரத்தின்படி, 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக இருந்த வருடாந்த மதுபான உற்பத்தி உரிம கட்டணம் 20 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. தொழில்துறையில் நுழையும்போது வசூலிக்கப்படும் கட்டணம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாகவே இருக்கும்.

தென்னங் கள்ளு உற்பத்தி செய்வதற்கான வருடாந்த ஒரு கோடி ரூபாய் உரிமக் கட்டணம் 15 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. பனங் கள்ளுக்கான உற்பத்தி அனுமதிப் பத்திரம் 5 இலட்சம் ரூபாயாகும்.

வினிகர் தொழிற்சாலைக் கட்டணம் 25 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாயகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு தடவைக்கான கட்டணம் 25 இலட்சம் ரூபாயாகத் திருத்தப்பட்டுள்ளது.

மாநகரசபை அதிகார வரம்புகளில் மதுபானங்களை சில்லறை விற்பனை செய்வதற்கான உரிமக் கட்டணம் ஒன்றரை கோடி ரூபாயாக புதிய திருத்தத்தின் பிரகாரம் அது 10 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நகர சபை பகுதிகளுக்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாயாக இருந்த ஆண்டு உரிமக் கட்டணம் 8 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பகுதிகளில் மதுபானங்களை சில்லறை விற்பனை செய்வதற்கான உரிமக் கட்டணம் ஒரு கோடி ரூபாயில் இருந்து 6 இலட்சம் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 230 கோடி வழங்குகிறது இந்தியா!

## கருத்தறிய துணைத் தூதுவர் கிழக்கு வருகை

மட்டக்களப்பு, பெப். 05
**கிழக்கு மாகாணத்துக்கு இலங்கைக்கான இந்தியாவின் துணைத் தூதுவர் சத்யஞ்சல் பாண்டே கிழக்கு மாகாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தார்.**



இந்திய அரசாங்கம் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக் காக 230 கோடி ரூபாய் மானி யமாக வழங்கவுள்ளது. இந்த நிதியில் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கக் கூடிய அபிவி ருத்திசார் விடயங்கள் தொடர் பில், கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த பல்வேறு தரப்பினரை யும் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறார். இதன் ஓர் அங்கமா கவே அவரின் இந்த வருகை அமைந்துள்ளது.

விவசாயம், சுற்றுலா, மீன் பிடி போன்ற முக்கிய 30 துறை கள் அபிவிருத்தி செய்யப்பட வுள்ள நிலையில், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில், ஊட கவியலாளர்களுடன் கலந்துரை யாடி, அவர்களின் கருத்துக்க ளையும் கேட்டறிந்தார். இந்தக் கலந்துரையாடலில் முன்வைக் கப்பட்ட கருத்துகள் தொடர்பி லும் கவனமெடுப்பதாக துணைத் தூதுவர் தெரிவித்தார். (ஐ)

# அம்பாறையில் கரி நாள் போராட்டம் முன்னெடுப்பு!




அக்கரைப்பற்று, பெப். 05
நாட்டின் 76ஆவது குடியரசு தினம் நேற்று கொண்டாடப் பட்டு வரும் நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பாறை யில் கறுப்பு நாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுதந்திர தின நாளை கரிநா ளாக அனுஷ்டிக்குமாறு வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாண வர் சமூகத்தினர், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசி யல் கட்சிகள் அழைப்பு விடுத் தன. இதை ஏற்றே நேற்று இந் தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டவர்க ளது உறவுகள், பொதுமக்கள், அரசியல் கட்சிகள் என்பன இணைந்து பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட் டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# நிந்தவூர் பிரதேசத்தில் சுதந்திர தின விழா!



நிந்தவூர், பெப். 05
இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தையொட்டிய நிகழ்வுகள் நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவா சல் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எம். ஏ. எம். றசீன் தலைமையில் நடைபெற்ற இந்த சுதந்திர தின நிகழ்வுகளை நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல், கத்தீப் பேஷ் இமாம் சம்மேள னம், உலமா சபை மற்றும் அல் குர்ஆன் மனன மத்ரஸாக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந் தன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட துடன் நம்பிக்கையாளர் சபை தலைவர் எம்.ஏ.எம்.றசீன் தேசிய கொடியை ஏற்றி வைத்த துடன் மரநடுகை மற்றும் சுதந் திரதின உரைகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நிந்தவூர் ஜும் ஆபள்ளிவாசல் நம்பிக்கையா ளர்கள் உலமா சபையினர் மற் றும் அல்-குர்-ஆன் மனன கலா சாலைகளின் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மௌலவி ஏ.பீ.இப்றாஹிம் (காஷிபி) சுதந்திர தினத்தை யொட்டிய விசேட துஆ பிரார்த்தனையினை நிகழ்த்திய துடன் கத்தீப் பேஷ் இமாம் சம்மேளன தலைவர் மௌலவி எம்.ஏ.சீ.எம்.அப்துர் றஹ்மான் (சஹ்தி) விசேட சொற்பொழி வும் ஆற்றினார். (ஐ-06)

# நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டம்!

நிந்தவூர், பெப். 05
நிந்தவூர் பிரதேச செயலகத் தில் சுதந்திர தின நிகழ்வு பிர தேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லதீப் தலைமை யில் சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்வின் ஆரம்பத்தில் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டு மரணித்தவர்களுக்காக இரு நிமி டம் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது. பிரதேச செயலாளர் அப்துல் லதீப் தேசிய கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின சிறப் புரை ஆற்றினார்.

நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் அப்துல் லதீப் ஆற்றிய உரையில்,

அரச உத்தியோகத்தர்கள் மக்களின் விடிவுக்காக - அவர் களது மறுமலர்ச்சிக்காக சேவை யாற்றுவதும் ஒருவகை சுதந்தி ரம்தான். இன, மத சமய வேறு பாடுகளுக்கு அப்பால் இலங் கையின் சுதந்திரத்திற்காக பாடு பட்ட தலைவர்களையும் அவர் களது தியாகங்களையும் நாம் எளிதில் மறந்துவிட முடியாது - எனக் கூறினார்.

நிகழ்வின் இறுதியில் பிர தேச செயலக நிர்வாக உத்தி யோகத்தர் சரீம் நன்றியுரை பகர்ந்தார். (ஐ-06)

### சுதந்திர தின எதிர்ப்பு பேரணி;

# இரவோடிரவாக பொலிஸாரால் தடை உத்தரவு வழங்கப்பட்டது!

மட்டக்களப்பு, பெப். 05
நாட்டின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்க 17 பேருக்கு நீதிமன்றம் தடை உத் தரவு பிறப்பித்தது.

நேற்று முன்தினம் மாலை பிறப்பிக்கப்பட்ட தடை உத்த ரவை இரவோடு இரவாக பொலிஸார் உரியவர்களுக்கு வழங்கினர்.

பாராளுமன்ற உறுப்பினர் கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் அமைப்பாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் உள்ளிட்ட 17 பேருக்கு எதிராகவே மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் ஊடாக பொலிஸார் தடை உத்தரவு களை பெற்றிருந்தனர். (ஐ)

# மட்டு. போராட்டத்துக்கு சென்றோர் மறித்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்!

திருகோணமலை, பெப். 05
நாட்டின் சுதந்திர தினமான நேற்று மட்டக்களப்பில் ஏற் பாடு செய்திருந்த போராட்டத் தில் பங்கேற்க சென்றவர்களை இராணுவத்தினர் வழிமறித்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் நேற்று மட்டக்க ளப்பு - கல்லடியில் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தி னர். இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக திருகோணம லையில் இருந்து பேருந்தில் சென்றவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர்.

திருகோணமலை மாவட் டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவி னர்கள் பயணித்த பேருந்தே இவ்வாறு திருப்பி அனுப்பப் பட்டது. வெருகல் பாலம் அருகே அமைந்துள்ள சோதனை சாவடி யிலேயே இந்தப் பேருந்து வழி மறிக்கப்பட்டது. அங்கு, பேருந் தும் பயணிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத் துக்காக கொண்டு செல்லப் பட்ட பதாதைகள் பறிக்கப்பட்டன. அத்துடன், சாரதி, நடத்துநரின் ஆவணங் களையும் அவர்கள் பறித்தனர். இது குறித்து படங்கள், காணொ லிகளை எடுத்தவர்களின் கைபேசிகள் பறிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்ட பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக் கப்பட்டன என்றும் தெரிவிக் கப்பட்டது.

அத்துடன், அவர்களை தொடர்ந்தும் பயணிக்க அனு மதிக்காமல் திருப்பி அனுப்பப் பட்டனர். இதன்போது சோதனை சாவடியில் பதற்ற மான நிலை நிலவியதாக தெரிய வந்தது. (ஐ)

# ரஷ்யாமீதான இனப்படுகொலை குற்றச்சாட்டை விசாரிக்க முடியாது!

## சர்வதேச நீதிமன்றம் அறிவிப்பு



**தி ஹேக், பெப். 05**

**ரஷ்யா இனப் படுகொலையில் ஈடுபடுகிறது என்று உக்ரைன் சுமத்தும் குற்றச்சாட்டை தங்களால் விசாரிக்க முடியாது என்று சர்வதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக உக்ரைன் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரித்த நீதிமன்றத்தின் தலைவர் ஜோன் இ. டான்ஹ்யூ கூறியவை வருமாறு,

உக்ரைனில் நடைபெற்று வரும் போரில் அந்த நாடு இனப் படுகொலையில் ஈடுபடுவதாக ரஷ்யா குற்றம் சாட்டினால் அதை மறுத்து உக்ரைனால் வாதிட முடியும். அதனை ஏற்று சர்வதேச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்க முடியும். ஆனால், உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள படையெடுப்பு, 1948ஆம் ஆண்டில் அந்த நாடு மேற்கொண்ட இனப் படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை மீறுகிறதா என்பதைக் குறித்து விசாரணை நடத்த நீதிமன்றத்துக்கு உரிமையில்லை என்றார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த நாட்டின்மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி படையெடுத்தது. அப்போது, நாட்டின் கிழக்குப் பகுதியில் உக்ரைன் இராணுவம் மனித உரிமை மீறலில் ஈடுபடுகிறது. அந்தப் பகுதி மக்களைப் பாதுகாக்கவே உக்ரைன் மீது படையெடுப்பதாக ரஷ்யா கூறியது. இந்தப் போரில் கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைன் பிரதேசங்களில் கணிசமான பகுதிகளை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. அந்தப் பகுதிகளில் ரஷ்யா மனித உரிமைகளில் ஈடுபடுவதாக உக்ரைனும் குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தொடர்ந்துள்ள வழக்கை விசாரித்த சர்வதேச நீதிமன்றம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமீபிய ஜனாதிபதி புற்றுநோயால் மரணம்!



விண்ட்ஹோக், பெப். 05

தென்மேற்கு ஆபிரிக்க நாடான நமீபியாவின் ஜனாதிபதி ஹேஜ் கீங்கோப் நேற்று அதிகாலை காலமானார். 82 வயதுடைய இவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சில நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தார். அவர், தலைநகர் விண்ட்ஹோக்கில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி ஹேஜ் கீங்கோப், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று துணை ஜனாதிபதி நங்கோலோ தெரிவித்தார்.

ஹேஜ் கீங்கோப் 2015ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதியானார். தற்போது 2ஆவது முறையாக அப்பதவியை வகித்து வந்தார். (ஐ)

# இஸ்ரேல் இராணுவத்தால் 6,500 பலஸ்தீனர்கள் கைது!

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடந்துவரும் போரில் 27 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், காஸாவில் இஸ்ரேல் தொடர்ந்து போர் குற்றங்களில் ஈடுபடுவதாக சர்வதேச அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன.

மேலும், பலஸ்தீனர்களை முறையான காரணங்களின்றி இஸ்ரேல் இராணுவம் கைது செய்கிறது என்று குற்றச்சாட்டுகள் அவ்வப்போது எழுகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் நடத்திய சோதனையில் மேற்கு கடற்கரைப் பகுதியில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீன கைதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 6 ஆயிரத்து 500 பேரை இஸ்ரேல் கைது செய்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவிக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாதங்களாவது சிறையலடைக்கப்படுகிறார்கள். வழக்குகளோ, விசாரணைகளோ இன்றி காலவரையற்ற சிறை தண்டனைகூட இஸ்ரேல் நிர்வாகத்தால் வழங்கப்படுகிறது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

# சிலியில் காட்டுத் தீ; 46 பேர் உயிரிழப்பு!



கொரோனல்,

தென்னமெரிக்காவின் சிலி நாட்டில் பரவி வரும் காட்டுத் தீயால் 46 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 100இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் சொத்துகள் எரிந்து நாசமாகின.

சிலி, மத்திய சிலி பகுதிகளில் இந்தக் காட் டுத் தீ பரவி வருகின்றது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். விமானங்கள் மூலம் தண்ணீர் வீசப்பட்டு காட்டு தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீ பரவ வாய்ப்புள்ள இடங்களில் இருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகிறனர்.

சிலியின் பிரதமர் கேப்ரியல் போரிக் இது குறித்து கூறுகையில்,

வல்பரைஸோ மாகாணத்தில் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணிகளில் சவாலை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். மீட்புப் பணியாளர்களுடன் ஒத்துழைக்குமாறு சிலி மக்களை போரிக் வலியுறுத்தி உள்ளார்.

19 ஹெலிகொப்டர்கள், 450 மீட்பு வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அந்த பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எல் நினோ என அழைக்கப்படுகிற வானிலை மாற்றத்தின் காரணமாக கடும் வறட்சியும் அதனால் எப்போதையும் விட கூடுதல் வெப்பநிலையும் காட்டுத்தீக்கு காரணமாக இருக்கலாம் என சுற்றுப்புற சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். (ஐ)

# புற்றுநோய் விழிப்புணர்வுக்காக தான் இறந்ததாக அறிவித்த நடிகை!

புதுடில்லி, பெப். 05

புதிய புற்று நோயாளர்களது எண்ணிக்கை 2050 ஆண்டுக்குள் 77 வீதத்தால் (3.5 கோடியால்) அதிகரிக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை வெளியிட்ட சிறிது நேரத்தில் இந்திய மொடல் அழகி பூனம் பாண்டே புற்றுநோயால் உயிரிழந்த செய்தி சமூக வலைத்தளங்களில் புயலைக் கிளப்பியது.

அந்தச் செய்தியில் உண்மை எதுவும் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கருப்பை வாய்ப் புற்று நோய் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே பூனம் பாண்டேயின் மறைவுச் செய்தி போலியாக இன்ஸ்ரா கிராம் தளத்தில் வெளியிடப்பட்டது என்று இப்போது அறிவிக்கப்படுகிறது. அந்தச் செய்தியும் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

"புற்றுநோயுடன் துணிகரமாகப் போராடி வந்த பூனம் பாண்டே காலமானார்" என்ற



செய்தி அவரது இன்ஸ்ராகிராம் தளத்தில் சனிக் கிழமை வெளியாகியது. இந்தியாவின் உள்ளூர் ஊடகங்கள் அவரின் மரண அறிவித்தல் செய்தியை வெளியிட்டன. 32 வயதான அவரது மறைவுக்கு இரங் கல் செய்திகள் வெளியாகின. பொலிவூட் சினிமா பிரபலங்கள் அஞ்சலி செய்திகளைப் பகிர்ந்துகொண்டனர். விக்கிப்பீடியா தளத்தில் அவரது சுயவிவரங்களில் இறப்பு நாளும் பதிவுசெய்யப்பட்டது.

எனினும் பூனம் பாண்டேயின் ரசிகர்கள் பலர் செய்தியை நம்ப மறுத்தனர். சில தினங்களுக்கு முன்பு கோவாவில் அவர் நலமே தோன்றுகின்ற காணொலி வெளியாகி இருந்ததால் மரணச் செய்தியைப் பலரும் நம்பவில்லை. இந்த நிலையில் அந்தச் செய்தி தன்னால் வேண்டும் என்றே வெளியிடப்பட்ட போலிச் செய்தி என்பதை அவரே தனது 13 இலட்சம் பயனார்களைக் கொண்டுள்ள இன்ஸ்ரகிராம் தளத்தில் நேற்று முனதினம் வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

"ஆமாம். எனது மறைவுச் செய்தியை வெளியிட்டமை மிகக் கொடுமையானது என்பதை நான் அறிவேன். ஆயினும் திடீரென நாங்கள் எல்லோருமே கருப்பை வாய்ப் புற்றுநோய் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளோம். அது எங்களுக்கு நல்லதில்லையா?" -இவ்வாறு பூனம் பாண்டே புதிய காணொலி செய்தி ஒன்றில் தோன்றித் தெரிவித்திருக்கிறார்." எனது மரணம் பற்றிய அறிவிப்பு எதனைச் சாதித்ததோ அதற்காக நான் பெருமைப் படுகிறேன்" என்றும் அவர் பெருமிதம் வெளியிட்டிருக்கிறார்.

# உக்ரைனின் தாக்குதலில் 20 பொது மக்கள் மரணம்!

## ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, பெப். 05

தனது கட்டுப்பாட்டிலுள்ள லிசிசான்ஸ்க் நகரில் உக்ரைன் நடத்திய எறிகணை தாக்குதலில் 20 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் காயமடைந்தனர் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைன் - ரஷ்ய போர் மீண்டும் மோசமாகி வருகின்றது. இந்நிலையில், உக்ரைன் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்கு உக்ரைன் பகுதியான லிசிசான்ஸ்க் நகர் மீது உக்ரைன் நடத்திய எறிகணை தாக்குதலில் குறைந்தது 20 பேர் பலியாகினர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

தற்போது அங்கு மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மொஸ்கோவின் ஆக்கிரமிப்பு படைகள், வார இறுதி நாட்களில் பிரபலமான ஒரு வெதுப்பகத்தை உக்ரைன் குறிவைத்ததாகக் கூறியது.

லிசிசான்ஸ்க் நகரில் ரஷ்ய அவசர அமைச்சகத்தின் ஊழியர்கள், இடிபாடுகளுக்கு அடியில் இருந்து 20 பேரின் உடல்களை மீட்டனர் என்று அமைச்சகம் தனது டெலிகிராமில் தெரிவித்துள்ளது.

இடிபாடுகளுக்குள் இருந்து தப்பிய 10 பேர் மீட்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட லுகான்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள லிசிசான்ஸ்க் நகரம் 2022ஆம் ஆண்டு ஒரு கொடூரமான போருக்குப் பிறகு ரஷ்ய படைகளிடம் வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் விரோத நடவடிக்கைக்கு கோட்டாபயவே பொறுப்பானவர்

## நாமல் ராஜபக்ஷ் எம். பி.



கொழும்பு, பெப். 05

**பெரமுன கட்சியின் ஆட்சியில் நடைபெற்ற அனைத்துவித மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் காரணம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் ஆகியோர் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் அடமஸ்தானய பிரதம தேரர் பல்லேகம ஹேமரத்ன தேரரை சந்திப்பதற்காக சென்றிருந்தனர்.

எதிர்வரும் தேர்தல்களின் போது பெரமுன கட்சிக்கு ஹேமரத்ன தேரரின் ஆதரவை பெற்றுக்கொள்வதே அவர்களின் நோக்கமாக இருந்தது. எனினும், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இரசாயன பசளைத் தடை போன்ற மக்கள் விரோத தீர்மானங்கள் குறித்து ஹேமரத்ன தேரர் கடும் காட்டமான தொனியில் விமர்சித்துள்ளார்.

அதுபோன்ற தீர்மானங்கள் காரணமாக வட மத்திய மாகாண விவசாயிகள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பெரமுன கட்சியின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட இரசாயன பசளை தடை போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் அனைத்தும் கோட்டாபயவின் தனித் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவற்றுக்கும் பெரமுன கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று நாமல் ராஜபக்ஷ இதன்போது கூறினார்.

### *ஜனாதிபதி தேர்தல்:*

# ஐ. தே. கவின் செயல்பாட்டு குழு தலைவராக ரொனால்ட் நியமனம்!

கொழும்பு, பெப். 05

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி தேர்தல் செயல்பாட்டுக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

உத்தேச ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய கட்சிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியை சூழ பெரும் கூட்டணியை உருவாக்குவது இந்த குழுவின் பிரதான பொறுப்பாக உள்ளது. இதனை தவிர, ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி பிரசார நடவடிக்கைகளையும் இந்த குழு முன்னெடுக்கும்.

இந்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் லசந்த குணவர்தன, கட்சியின் நிறைவேற்று பணிப்பாளர் ஷமல் செனரத் மற்றும் மத்திய குழு உறுப்பினர் கிரிஷான் தியடோர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். எவ்வாறாயினும், ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி தேர்தல் செயல்பாட்டு குழுவுடன் இணைந்து செயல்படுவதற்கு மேலும் பல உப குழுக்களை நியமிக்கவும் ஜனாதிபதி ரணில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளுக்கான பிரதான பணிமனை மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் என்பன குறித்து உடனடி அறிக்கையை கையளிக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி தேர்தல் செயல்பாட்டுக் குழுவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ஐ)

# கார் - வான் மோதல் 6 பேருக்கு படுகாயம்!

கொழும்பு, பெப். 05

காரும் வானும் மோதிய விபத்தில் 6 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

தங்காலை - அம்பலாந்தோட்டை பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றக்கிழமை காலை அம்பலாந்தோட்டையிலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற காரொன்றும், ஹுங்கமவில் இருந்து அம்பலாந்தோட்டை நோக்கிச் சென்ற வானும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிவுல பஸ் நிலையத்துக்கு அருகில் பயணிகள் பஸ் ஒன்று நிறுத்தப்பட்டபோது, பின்னால் வந்த வான் பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, எதிரே வந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மூலமாக அரசை எதிர்ப்பவர்கள் கைதாகலாம்!

## *சட்டத்தரணி சாலிய பீரிஸ்*

கொழும்பு, பெப். 05

பயங்கரவாதத்துக்கான வரைவிலணக்கம் பரந்துபட்டதாக காணப்படுகின்றது. இதன் காரணமாக அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் கொள்கைகளுடன் உடன்படமறுப்பவர்கள் கைது செய்யப்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் கீழ் தடுத்துவைக்கப்படும் நிலை ஏற்படலாம் - என்று சட்டத்தரணி சாலியபீரிஸ் வாதிட்டுள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீதான உயர்நீதிமன்ற விசாரணையின்போதே அவர் இவ்வாறு வாதிட்டார்.

மக்களின் ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்புகள் உட்பட அரசாங்கத்தின் கொள்கையுடன் உடன்படமறுக்கும் மக்களின் நடவடிக்கைகளை பயங்கரவாதம் என முத்திரைகுத்தி மக்கள் அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை பயன்படுத்த முடியும்.

இலங்கையின் பாதுகாப்பு சட்டங்களை கடந்தகாலங்களில் படைத் தரப்பினரும் அரசியல்வாதிகளும் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்தார்கள் என்பதை சுட்டிக்காட்டிய அவர் புதிய சட்டமூலம் துஷ்பிரயோகம் செய்யப்பவடுதற்கான சாத்தியக்கூறுகள் உண்மையானவை. இவை வெறுமனே அனுமானங்களோ, ஊகங்களோ இல்லை.

பயங்கரவாத தடைச் சட்டம் ஐ. சி. சி. பி. ஆர். போன்றன அரசியல் மற்றும் தனிப்பட்ட எதிராளிகளையும் சிறுபான்மையினத்த வர்களையும் இலக்குவைக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. தனிப்பட்டசுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அவசியமான பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

புதிய சட்டமூலம் பாதுகாப்பு படைகளிற்கு கைதுசெய்வதற்கான அதிகாரங்களை வழங்குகின்றது இது இதுவரை பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் மாத்திரமே கிடைத்துள்ளது. இது படையினர் கண்மூடித்தனமான கைதுகளில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் - என்றார்.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணை வெள்ளிக்கிழமை முடிவடைந்தது - நீதிமன்றம் தனது முடிவை சபாநாயகருக்கு அனுப்பிவைக்கவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மது விருந்தில் மோதல் ஒருவர் கொலை!

கொழும்பு, பெப். 05

மதுபான விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பானதில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்தார்.

களுத்துறை - மத்துகமவில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த மதுசன் (வயது 32) என்பவரே இவ்வாறு கொலையானார்.

கொலை சந்தேகநபரான 27 வயது நபர் மத்துகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ‘யுக்திய’ நடவடிக்கை மேலும் 660 பேர் கைது

கொழும்பு, பெப். 05

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் போதை ஒழிப்பு நோக்கிலான ‘யுக்திய’ நடவடிக்கையின் கீழ் நேற்று அதிகாலை 12.30 மணி வரையான நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 660 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 552 பேர் போதைப்பொருள் தொடர்பானவர்களாவர். ஒருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

கைதானவர்களில் 108 பேர் பொலிஸாரால் வேறு சில குற்ற வழக்குகள் தொடர்பில் தேடப்படுவோர் பட்டியலில் உள்ளவர்களாவர்.

அத்தோடு, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் உள்ள 3 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சந்தேக நபர்களிடமிருந்து 152 கிராம் ஹெரோயின், 134 கிராம் ஐஸ், 4 கிலோ 150 கிராம் கஞ்சா, 775 கஞ்சா செடிகள், ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 826 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(ஐ)

# விபத்தில் தம்பதியர் பலி!

கொழும்பு, பெப். 05

வானும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் தம்பதியர் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் தென்னகும்புர - ராகல வீதியின் ஹராகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 05

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் இன்று திங்கட்கிழமை முதல் கல்வி செயல்பாடுகளுக்காக மீள ஆரம்பமாகின்றன.

2023ஆம் கல்வி ஆண்டிற்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி செயல்பாடுகள் இதன்போது ஆரம்பிக்கப்படும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்காக கடந்த டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. இதனையடுத்து இவ்வருடம் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், உயர்தரப் பரீட்சையின் விவசாய பாடத்துக்கான வினாத்தாள் சட்டவிரோதமான முறையில் வெளியிடப்பட்டதன் காரணமாக அந்த பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த பரீட்சை மீள் திகதி அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டதன் காரணமாக பாடசாலை விடுமுறை நாட்களும் நீடிக்கப்பட்டது. இந்தநிலையில், இன்று பாடசாலைகள் மீள ஆரம்பமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெல்லி மீன்களால் மீனவர்கள் பாதிப்பு

கொழும்பு, பெப். 05

வடமேல் மாகாண கடலோர பகுதிகளில் வலைகளில் ஜெல்லி மீன்கள் சிக்குவதால் மீனவர்கள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

வடமேல் கடற்பகுதியில் இந்த நாட்களில் ஜெல்லி மீனினங்கள் அதிகமாக காணப்படுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நச்சுத்தன்மை வாய்ந்த ஜெல்லி மீனைத் தொட்டால் உடலில் அரிப்பு, வீக்கம் ஏற்படுவதுடன், காயங்களும் ஏற்படுவதாகவும், மிகவும் வேதனை ஏற்படுகின்றது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாரவில வளைகுடாவில் அதிகளவான ஜெல்லிமீன்கள் வலையில் சிக்குவதால் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடற்கரையில் விளையாடுபவர்களும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழிலும்...

தேசிய கீதம் பாடப்பட்டு இறுதியில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டன.

இராணுவ அணி வகுப்புக்குப் பின்னரான வழமையான கலாசார அணிவகுப்பு இந்த முறை இடம்பெறவில்லை. எனினும், இலங்கையின் சகல கலாசார கூறுகளையும் உள்ளடக்கிய குறுகிய கலாசார அணிவகுப்பு மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## இலங்கை...

கொண்டது.

எங்கள் உறவு பாதுகாப்பு ஒத்துழைப்பு பரஸ்பரம் நன்மை பயக்கும் வர்த்தகம் மற்றும் முதலீடு அத்துடன், கல்வி பரிமாற்றங்கள் அறிவியல் கூட்டாண்மைகளால் வளர்க்கப்படும் மக்களிடையேயான உறவுகளை அடிப்படையாக கொண்டது.

எதிர்வரும் வருடங்களில் இந்தோ - பசுபிக்கின் சகாக்கள் என்ற அடிப்படையில் நாங்கள் இலங்கையுடனான பொருளாதார கடல்சார் உறவுகளை மேலும் வலுப்படுத்துவோம். காலநிலை நெருக்கடி மற்றும் எங்களின் கரிசனைக்குரிய ஏனைய விடயங்களுக்கு தீர்வைக் காண முயல்வோம் - என்றும் தெரிவித்துள்ளார்.

## இந்தியா...

உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும், தூதுவர்கள் பங்கேற்காததை ஜனாதிபதியின் பணிமனை உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன், சுதந்திர தின நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டதாகவும் அழைப்பு விடுக்கப்பட்டதா இல்லையா என்று தமக்கு எதுவும் தெரியாது எனவும் ஜனாதிபதி பணிமனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சுடன் ஊடகங்கள் தொடர்பு கொண்ட போதும் உரிய பதில் கிடைக்கவில்லை.

சுதந்திர தின நிகழ்வில் கொழும்பிலுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு தூதுவர்கள் பங்குபற்றுவது மரபாகும். எனினும், இம்முறை அவர்கள் பங்கேற்காதமைக்கு சீன சார்புடைய தாய்லாந்து பிரதமர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டமையே காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## கிளிநொச்சியில்...

பொலிஸார் எச்சரித்தனர். போராட்டக்காரர்கள் கலைய மறுத்த நிலையில் அவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகள் வீசித் தாக்கப்பட்டன. அத்துடன், தண்ணீரை விசிறி அடித்தும் பொலிஸார் அவர்களை கலைக்க முயன்றனர். மேலும், போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தியும் நடத்தினர்.

இந்த நிலையில், 5 மாணவர்களை பொலிஸார் விரட்டிப் பிடித்து கைது செய்தனர். இதன்போது, போராட்டத்தில் பங்கேற்றிருந்த சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களை பொலிஸாரிடம் இருந்து மாணவர்களை காப்பாற்ற முயன்றனர். இதன்போது இருவர் மீதும் பொலிஸார் தாக்குதல்களை நடத்தினர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் பாதுகாப்பு பொலிஸாருடனும் முரண்பட்டனர்.

போராட்டத்தின்போது ஏற்பட்ட களேபரங்களால் அந்தச் சூழல் முழுவதும் பதற்றம் நிலவியது. நிலைமைகள் ஓரளவுக்கு சுமுகமானதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு கோரி பொலிஸாருடன் பேச்சு நடத்தப்பட்டது. பேச்சில் சுமுக நிலை எட்டப்படாத நிலையில், மாணவர்கள் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## ஈழத்தை...

பயங்கரவாதிகள் எனத் திரும்ப திரும்ப குறை கூறியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தியாகராயர் மண்டபத்தில் நடைபெற்ற ஈழம் குறித்த நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈழத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் காரணம் கருணாநிதி மற்றும் தி. மு க.தான் என்று கூறினால் அது அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் பயன் தரலாம். ஆனால் ஈழத்தமிழர்களுக்கு எப்போதும் பயன் தராது.

தமிழீழம் அழிந்ததற்கு தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தி. மு. கவையும் கருணாநிதியை மட்டுமே குறை கூறினார்கள். ஆனால், உலகளவில் ஈழத்தை அழிக்க செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை.

இந்தியாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டம்கூட நடைபெறவில்லை. உலக நாடுகள் ஈழத் தமிழர்களை பயங்கரவாதிகள் எனத் திரும்ப திரும்ப குறை கூறியுள்ளனர். ஈழத் தமிழர்களை மிகப் பெரிய ஆயுதக் குழுக்களாக மாற்றியது காங்கிரஸ்தான் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## காலிமுகத்...

நிகழ்வில், ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தினர் இசைவாத்தியங்களை இசைத்த பின்னர், படைகளின் பிரதானி, முப்படை தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரால் ஜனாதிபதி விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்துவரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மகுல் இசை மற்றும் சக் ஓசைக்கு மத்தியில் ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்தமையை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து 105 பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை பாடினர். அதனை தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் மற்றும் காத்தா இசைத்தனர்.

இதைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதைச் செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தொடர்ந்து சுதந்திர தின அணிவகுப்பு விழா நடைபெற்றது.

இந்த அணிவகுப்பில், முப்படைகள் கவச வாகனங்கள் மற்றும் அணிவகுப்புகளுடன் 22 ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் 29 அங்கவீனமுற்ற அதிகாரிகளின் அணிவகுப்புகளும் பங்கேற்றன.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை விசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி, அங்கு பயணித்த அனைத்து படையினருக்கும் மரியாதை செலுத்தினார்.

அத்துடன், வான் பலத்தை வெளிப்படுத்தும் வகையில், கிபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்கு சொந்தமான விமானங்களின் சாகசங்கள் நிகழ்வை அலங் கரித்தது. பராசூட் நிகழ்ச்சிகளும் நடந்தன.

இதேசமயம், 76ஆவது சுதந்திர தினத்துக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான் சிஸ், பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர், ஜப்பான் பேரரசர் நரு ஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தென் கொரியா ஜனாதிபதி யுன் சுக் சுக் யெஓல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, லிபிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் ஒய் அல் மென்பி, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம், அவுஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் டேவிட் ஹர்லி ஆகியோரும் பாகிஸ்தான் ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதி பதி, குவைத் அமீர் உள்ளிட்ட அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் வாழ்த்துகளை தெரிவித்திருந்தனர். (ஐ)

## எம் தாய்நிலம்...

போதிலும், ஈழத் தமிழர்களின் இனப் பிரச்னைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்காக மீண்டும் ஒரு தடவை எமது ஏகோபித்த வெளிப்படுத் தலை வலியுறுத்திக்கூற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இன்று பேரெழுச்சியாக நமது தாயகத்தின் மட்டக் களப்பு, கிளிநொச்சியில் ஒன்று திரண்டு நிற்கின்றோம்.

தமிழ், சிங்கள தனித்தனி அரசுகளைக் கொண்டிருந்த இலங்கைத் தீவு காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவையின் நிமிர்த்தம் இணைக்கப்பட் டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழின அரசை அமைப்பதற்கான வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு 1977 ஆம் ஆண்டு மக்கள் மகத்தான ஆணையை வழங்கி தங்கள் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்ததோடு, 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சில் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டமையும் தீர்வுக்கான வழிகளில் முன்னேற்றம் காணப்படாமையின் விளைவாகவே தமிழரிடம் ஆயுதப் போரட்டம் கருக் கொண்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழர் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளை கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள் 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அதியுயர் இனவழிப்பு படுகொலைகள் உட்பட மனித படுகொலைகள், நிலங்களை கையகப்படுத்துதல், பாலியல் வன்முறைகள், பண்பாட்டு மற்றும் பொருளாதார கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டை தாங்கிநிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டிடை அடியொற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் - எமது உறவுகளை தேடும் உரிமை, கருத்துரிமை, பேச்சு உரிமை, வளங்களை அனுபவிக்கும் உரிமை, நீதி கோரும் உரிமை என்பன பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ் நிலை பாதுகாப்பு சட்டம் மற்றும் நிறைவேற்ற முன்மொழியப்பட்டுள்ள ஏனைய சட்டங்களால் மறுக்கப்படுகின்றது. ஆகவே இச்சட்டங்கள் மீளப்பெறப்பட வேண்டும்., தொல்பொருட்த் திணைக்களம், வன அஜீவராசிகள் திணைக்களம். வனவள் பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும்., தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சிங்கள குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும், விடுவிக்கப்படாது எஞ்சியுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அனைத்துலக நீதி வழங்கப்படுவதோடு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் இளையோர்கள் கூட்டாக சிந்திப்பதைத் தடுத்து உளவியல் ரீதியாக சிதறடிக்கும் நோக்கம் கொண்டு அரச படைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் விநியோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும், பிராந்திய பண்பாட்டுப் பல்கலைக்கழகங்களாக விளங்கும் எமது யாழ்ப்பாண, கிழக்கு, வவுனியாப் பல்கலைக்கழகங்கள் பிராந்தியம் சார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை மையமமாகக் கொண்டு செயற்படுதலையும் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாரா செயற்பாடுகளில் அவர்களது வாய்ப்புக்களின் இருத்தலையும் உறுதி செய்ய வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்கள், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் கைது செய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தப்படும் அனைத்து வகையான அச்சுறுத்தல்கள், தடைகளை முடிவுக்கு கொண்டு வரவும் நினைவு கூறும் உரிமையை உறுதி செய்யுமாறும் வேண்டுகின்றோம், கால காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு அனைத்துலக நீதி பொறிமுறை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (ICC) அனைத்துலக நீதிமன்றம் (ICC) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும், தமிழினப் படுகொலையை நிகழ்த்தி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் உரிமை மீறல்கள், சமூக விரோதச் செயல்களுக்கு பாதுகாப்பாக உள்ள இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுடன், மக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத்தமிழரின் தேசிய இன பிரச்னையில் மரபு வழி தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவோர் அரசியல் தீர்வும் அனைத்துலக சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து - எம்மை நாமே ஆழக்கூடிய நிரந்தர தீர்வும் பொது வாக்கெடுப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சார்பாக இந்த பிரகடனத்தின் ஊடாக உலகுக்கு அறிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## வடக்கு...

இதேநேரம், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது. கல்லடி செபஸ்தியன் தேவாலயம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை தடுக்கும் முகமாக கல்லடி பாலத்திலும் மட்டக்களப்பு நகரிலும் பெரு மளவு பொலிஸாரும் விசேட அதிர டிப் படையினரும் குவிக்கப்பட்டி ருந்த நிலையில் பேரணி ஆர்ப்பாட்ட மாக மாற்றப்பட்டிருந்தது. இதனி டையே கல்லடி பால வீதியையும் பொலிஸார் மூடியிருந்தனர்.

இதேபோன்று அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கங்கள் 08, 06)

ஈழநாடு
Eelanadu

## உயிரிழந்த இராணுவத்தினருக்கும் முழுச்சம்பளம், பிற கொடுப்பனவு!

### பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

கொழும்பு, பெப். 05

2009 இறுதி யுத்தம் வரையில் உயிரிழந்த மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினர் மற்றும் மருத்துவ பணியின் காரணமாக ஓய்வு பெற்ற ஆயுதப் படை உறுப்பினர்களுக்கு முழுச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, அவர்களில் 55 வயது வரை அவர்களை சார்ந்தவர்களுக்கு குறித்த கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## சுதந்திர தின விழாவை புறக்கணித்தார் சஜித்!

கொழும்பு, பெப். 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்துள்ளார் என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கவில்லை.

நாட்டின் 76வது சுதந்திர தின நிகழ்வுகள் காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று காலை முதல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அமைச்சுகள் செயலர்கள், படைத் தரப்பி னர் பங்கேற்றனர். இந் நிகழ்வில், பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர் ஷ்ரேதா தவிசி பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையை கௌரவித்தது கூகுள் நிறுவனம்

கொழும்பு, பெப். 05




இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்துக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் கூகுள் தேடு பொறி தனது இலட்சினையை நேற்று மாற்றியது.

வழமையான கூகுள் இலட்சினைக்கு பதிலாக கூகுள் என்ற பெயருடன் இலங்கையின் தேசிய கொடி அந்த இலட்சினை இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டே கூகுள் இவ்வாறு தனது இலட்சினையை மாற்றியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் கூகுள் இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டு இந்தக் கௌரவத்தை அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து பிரதமர் நாடு திரும்பினார்!

கொழும்பு, பெப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் 76ஆவது சுதந்திர விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்த தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்து நாடு திரும்பினார்.

கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக அவர் நாடு திரும்பினார்.

இலங்கை வந்த தாய்லாந்து பிரதமர், ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார். அத்துடன், வரலாற்று சிறப்புமிக்க இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதையும் பார்வையிட்டார்.

மேலும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் தாய்லாந்தின் துணைப் பிரதமரும், வர்த்தக அமைச்சருமான பும்தம் வெச்சயாச்சாய் மற்றும் இலங்கையின் வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் வாயிலாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை அதிகரிப்பதற்கும், ஆசியான் பொருளாதாரங்களுடன் ஆழமான ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### 3 ஆண்டுகளில் மட்டும்

# 30 ஆயிரம் கோடி பெறுமதியான நகைகள் சொத்துகள் விற்பனை!

கொழும்பு, பெப். 05

**கடந்த மூன்றாண்டுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நகைகள் மற்றும் சொத்துகள் விற்கப்பட்டுள்ளன அல்லது அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சகத்தின் பதிவுகளில் தெரியவந்துள்ளது.**

நாட்டில் தொடரும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக, மக்கள் தங்கள் சொத்துகளை அடமானம் அல்லது விற்றுள்ளனர். மேலும் சில வீடுகளில் இருந்த நகைகள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், கடந்த சில ஆண்டுகளில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம், பொருளாதார சிக்கல்கள் காரணமாக வாகனங்கள் வாங்குவதும் சுமார் 80 சதவீதம் குறைந்துள்ளதாகவும் வாகனச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியை பிளவுபடுத்துவதற்கு அரசியல் ஒப்பந்தம்!

### அந்தக் கட்சியே குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 05

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்படவுள்ள அரசியல் கூட்டணியை சீர்குலைத்து, பிளவுபடுத்த ஓர் அணிக்கு அரசியல் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியினர் சாடியுள்ளனர்.

இதனடிப்படையில், இந்த அணியினர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அமைக்கப்படும் நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்காக கட்சிக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த செயலில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைமையிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கட்சியின் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது போனால், முக்கியமான சந்திர்ப்பம் ஒன்றில் இவர்கள் புதிய கூட்டணிக்கு மட்டுமல்லாது கட்சிக்கும் அரசியல் ரீதியான பெரும் சேதத்தை ஏற்படுத்துவார்கள் என சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

கட்சிக்குள் பிரச்னைகளை ஏற்படுத்தும் இந்த நபர்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த நபர்கள் குறித்து நாட்டுக்கும் கட்சியினருக்கும் தெரியப்படுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் என்றும் தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## கருத்து, பொருளாதார சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினத்தை நாம் எப்படி கொண்டாடுவது?

### எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

கொழும்பு, பெப். 05

நாம் 76 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. ஏகாதிபத்திய சக்திகளின் கீழ் காலனித்துவ நாடாக இல்லாவிட்டாலும் அரசியல் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் இல்லாத நாட்டில் சுதந்திர தினத்தை நாம் எவ்வாறு அபிமானத்துடன் கொண்டாடுவது? என்பது பிரச்னைக்குரிய விடயம் - இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க்கட்சி தலைவர் சஜித்.

காலி மாவட்ட பாடசாலை ஒன்றுக்கு நேற்று முன்தினம் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சபாநாயகர் தலைமையிலான அரசாங்கம் நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றியது. இதனூடாக பேச்சு சுதந்திரம் கருத்து சுதந்திரம் உண்மையை வெளிப்படுத்தும் சுதந்திரம் அரசியல் சுதந்திரம் என்பன பறிக்கப்பட்டுள்ளது. வங்குரோத்து நிலைமையால் 220 இலட்சம் மக்களும் பொருளாதார சுதந்திரத்தையும் சமூக சுதந்திரத்தையும் இழந்துள்ளனர். சேதன உர மோசடியால் விவசாயத்தில் ஈடுபடும் சுதந்திரமும் இழக்கப்பட்டுள்ளது.

மக்களுக்காக வீதியில் இறங்கி உரிமைகளை கோரி பேராட்டம் நடத்தும் போது நீர் தாரை தாக்குதலுக்கும் கண்ணீர் புகைத் தாக்குதலுக்கும் மக்கள் உள்ளாகும் போது நாட்டில் உண்மையான சுதந்திரம் உள்ளதா என்பது கேள்விக்குறியே.

நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் வர்த்தகங்களும் சொத்துக்களும் பரேட் சட்டத்தின் மூலம் ஏலம் விடப்படும் நாட்டில் கல்வியில் சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திரத்தை உண்மையாக கொண்டாட முடியுமா என்பது பிரச்னைக்குரிய விடயமாகும்.

சுகாதாரத்துறையில் சுதந்திர செயல்பாடு இல்லாது போனமை நாட்டைச் சுற்றி கடல் இருந்தாலும் மீன் வளத்தில் தன்னிறைவு இன்மை போன்ற பல பிரச்னைகள் உள்ள நாட்டில் சுதந்திரத்தை அபிமானத்துடன் கொண்டாட முடியாது.

பொருளாதார பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை காத்தே 76 ஆவது சுதந்திரத்தை நாம் உண்மையில் கொண்டாட வேண்டும். இந்த பொருளாதார பயங்கரவாதத்தில் இருந்து மீள 220 இலட்சம் மக்களும் சாதி, மதம், இனம், குலம், கோத்திரம் மற்றும் கட்சி என அனைத்து வேறுபாடுகளும் இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ஐ)

## சுதந்திர தினத்தை எதிர்த்து நீர்கொழும்பிலும் போராட்டம்!

கொழும்பு, பெப். 05

“அவர்களை துரத்துவோம். சுதந்திரம் பெறுவோம்” என்ற தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுதந்திர தினத்தன்று நீர்கொழும்பு - தெல்வத்தை சந்தியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நீர்கொழும்பு மக்கள் சபை ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம் முற்பகல் பகல் 10:30 மணியளவில் ஆரம்பமானது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகளை எழுதியிருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர்.

சமூக ஊடகங்களையும் பிரதான ஊடகங்களையும் கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டுவரப்பட்டமையை கண்டித்தும் மக்களின் கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசாங்கத்தின் சர்வாதிகார நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்னும் இதுபோன்ற பல விடயங்களை சுட்டிக்காட்டியும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இம்ரான்கானின் அரசியல் அஸ்தமனம் : பாகிஸ்தான் அரச இரகசியம் கசிவு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பாகிஸ்தான் அரசின் இரகசியங்களை கசியவிட்ட வழக்கில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு பத்து ஆண்டு சிறை தண்டனை நீதிமன்றால் தற்போது விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான ஊழல் வழக்கு நிரூபணமானதை அடுத்து கடந்த ஆகஸ்ட் முதல் அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது, அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டு உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் இம்ரானுக்கு நீதிமன்றம் ஜாமின் வழங்கியிருந்தது.

இந்த வழக்கில் இம்ரான் கான் மற்றும் அவரது தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் துணை தலைவர் குரேஷிக்கும் தலா பத்தாண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டின் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே பரிசு பொருள் வழக்கில் விதிக்கப்பட்ட மூன்று ஆண்டு சிறை தண்டனைக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.






### அரசியலில் ஆட்டமிழக்கிறாரா?

ஒரு வெற்றிகரமான கிரிக்கெட் வீரராக வலம் வந்து பல நாட்டு வீரர்களை தனது ஆட்டத்தால் கதிகலங்க வைத்த பாகிஸ்தான் வீரர் தான் இம்ரான் கான். இன்று தனது சொந்த நாட்டில் அரசியல் விளையாட்டில் ஆட்டம் இழந்து உள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரமதரான இம்ரான் கான், ஆளும் தரப்பிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மிகப் பெரியளவில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்.




யாரும் எதிர்பாராத வகையில் அவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். ஊழல் வழக்கு ஒன்றில் நீதிமன்ற வளாகத்திலேயே வைத்து கைது செய்யப்பட்டார்.

ஆயினும் பாகிஸ்தானில் அதிகரிக்கும் பணவீக்கம், பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் இம்ரான் கானுக்கான ஆதரவு தொடர்ந்து அதிகரித்தே வருகிறது.

### இம்ரான் கான் ஆதரவு அலை:


1996இல் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (பி.டி.ஐ) கட்சியைத் தொடங்கிய இம்ரான் கான் 20 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சியைப் பிடித்தார். கிரிக்கெட் உலகில் வீரனாகவும், பாகிஸ்தானில் அவர் பெரும் நட்சத்திரமாக இருந்த போதிலும், அரசியலில் ஒரு ஆசனத்தை வெல்லவே அவர் 17 ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது.


2011 தேர்தல் முதல் இம்ரான் கானுக்கு ஆதரவான அலை வீசத் தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள படித்த இளைஞர்கள் இம்ரான் கானை ஆதரிக்கத் தொடங்கினர். பாகிஸ்தானை வலிமையான தேசமாக மாற்றுவதே தனது நோக்கம் என்று முழங்கினார்.

### கிரிக்கெட் வாழ்க்கை:

கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், பிரைன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் போல் அந்த காலத்திலேயே கிரிக்கெட்டில் ஒரு கலக்கு கலக்கியவர். சுமார் இருபது ஆண்டுகாலம் அதாவது 1971 முதல் 1992 வரை பாகிஸ்தான் அணிக்காக ஆடிய இம்ரான் கான் அந்த கால கட்டத்தில் ஒரு தலை சிறந்த வீரர்.





1992 இல் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் உலகக் கோப்பை பெற்றுத் தந்த இம்ரான் கான் 2018 தேர்தலில் களமிறங்கினார். அனைவராலும் மதிக்கப்படும் ஊழலற்ற, வளமான தேசத்தைக் கட்டியெழுப்பப் போவதாகக் கூறி அவர் தேர்தலை எதிர்கொண்டார். இருப்பினும், அவரால் அதை முழுமையாகச் செய்ய முடியவில்லை.

### அரசியலில் 17 ஆண்டு காத்திருப்பு:

1992ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற போதும், பாகிஸ்தானின் தனிப்பெரும் நட்சத்திரமாக உயர்ந்த இம்ரான் கான், 1996ஆம் ஆண்டு பாகிஸ்தான் தெஹறீக் இன்சாஃப் என்ற கட்சியை தொடங்கினார். பாகிஸ்தான் அரசியல் களத்தில் இம்ரான் கான் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்த போது முதல் தேர்தலில் அவரும், அவரது கட்சியும் படுதோல்வியை சந்தித்தது. 2002ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுதேர்தலில் தான் இம்ரான் கான் எம்பியாக தேர்வானார்.

2007ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் முஷாரப்பால் இம்ரான் கான் வீட்டு காவலில் வைக்கப்பட்டார். அவரது அரசியலுக்கு பல தடைகள் உருவாக்கப்பட்டன. தடைகளைத் தாண்டி புதிய பாகிஸ்தானைப் படைப்பேன் என்றார் இம்ரான்.

2013 பொதுத் தேர்தலில் இம்ரான் கான் கட்சி 2வது பெரிய கட்சியாக உருவெடுத்தது. இம்ரானின் வளர்ச்சியை தடுக்க அவருக்கு எதிராக அரசியல் அரங்கில் காய்கள் நகர்த்தப்பட்டன.



இம்ரான் கானின் தனிப்பட்ட வாழ்க்கையை குறிவைத்து இம்ரான் தனது மதகுருவையே மூன்றாவது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்தனர். இது இம்ரான் கானுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

### பாகிஸ்தானின் பிரதமர்:

பின்னர் பாகிஸ்தானின் பிரதமராக இருந்த நவாஷ் ஷெரீப் ஊழல் வழக்கில் சிக்கி உச்ச நீதிமன்றத்தால் தனது பதவியை இழக்க, ஆளும் கட்சி மீது மக்களிடையே அதிருப்தி எழுந்தது அதை அறுவடை செய்யும் முயற்சிகளில் இறங்கினார் இம்ரான்.

ஊழலில்லா பாகிஸ்தான் என்ற முழக்கத்தோடு தேர்தலில் களமிறங்கிய இம்ரான் கானை மக்களும் ஏற்றுக் கொண்டனர். ஏறத்தாழ தனிப்பெரும்பான்மையுடன் பாகிஸ்தானின் 19வது பிரதமராக இம்ரான் கான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இம்ரானின் தவறான அரசியல் பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொளைகளால் பாகிஸ்தான் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வருவதாகவும், விலைவாசி கிடுகிடுவென உயர்ந்தது. இதன் காரணமாக அந்நாட்டு மக்கள் துயரங்களை சந்தித்து வருகின்றனர் என்ற அஸ்திரத்தை எதிர்க் கட்சிகள் கையில் எடுத்தன.

இதனை தடுப்பதற்காக எவ்வித முயற்சிகளையும் செய்யாத இம்ரான்கான் மீது இது தொடர்பாக குற்றம் சாட்டி எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கோரினர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானின் அதிவலுவுள்ள தலைவராக இருந்த இம்ரான் கான், சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஆட்சியை இழக்க நேரிட்டது. இப்போது சிறையில் உள்ள அவருக்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வரும் நிலையில், மீண்டும் அவர் ஆட்சியை கைப்பற்றுவாரா என்பது சந்தேகமே !

●

# சுதந்திரத்தினைக் காலனித்துவ நீக்கம் செய்தல்

**மகேந்திரன் திருவரங்கன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையிலே சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

இலங்கை சுதந்திரம் பெற்று 76 வருடங்கள் கடந்துவிட்டன. பின்காலனித்துவ சூழலிலே சுதந்திரம் என்றால் என்ன? ஐரோப்பியக் காலனித்துவ ஆட்சியில் இருந்து அரசியல் ரீதியாக விடுதலை பெறுவதுதான் சுதந்திரமா? நாம் உண்மையிலே சுதந்திரத்தினை அனுபவிக்கிறோமா? ஒரு சுதந்திர நாட்டிலே யாருக்குச் சுதந்திரம் இருக்கிறது? யார் இன்னும் சுதந்திரமற்ற வாழ்க்கையினை வாழ்கிறார்கள்? சுதந்திரம் பெற்ற மக்களிடம் உண்மையிலே இறைமை இருக்கிறதா? போன்ற கேள்விகளை நாம் பின்காலனித்துவ நாடுகள் சார்ந்த புலமைத்தளங்களிலும், செயற்பாட்டுத் தளங்களிலும் அடிக்கடி எழுப்பி வருகிறோம். இந்தக் கேள்விகளுக்கும் அப்பால் சென்று இறைமை என்பது விடுதலைக்குரிய கருத்தியலா என்ற கேள்வியினை இந்தக் கட்டுரை எழுப்புகிறது. இந்தக் கேள்வியின் மூலம் விடுதலை பற்றி காலனிநீக்கம் செய்யப்பட்ட ஒரு பார்வையினை முன்னெடுப்பதன் அவசியத்தினைக் கட்டுரை வலியுறுத்துகிறது. அரசியல் சுதந்திரமும் தொடரும் பொருளாதார அநீதியும்

சுதந்திரத்தினைப் பற்றிச் சிந்திக்கையில் நாம் மொழி ரீதியிலான சுதந்திரம், பொருளாதார ரீதியிலான சுதந்திரம், அரசியல் ரீதியிலான சுதந்திரம் எனப் பல வகைப்பட்ட சுதந்திரங்கள் குறித்துப் பேசுகிறோம். இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் பின்னரும் ஐரோப்பிய காலனியக்க சக்திகளிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்கென இறைமை உடைய ஓர் அரசினை உருவாக்கிக் கொண்டனர். இந்த இறைமை வெறும் அரசியல் ரீதியிலான ஒன்றாகவே இருந்தது. பொருளாதார ரீதியிலே காலனித்துவச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியங்களுக்கு, காலனித்துவ வன்முறையினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரச் சுரண்டல்களுக்கான நீதியும், நிவாரணமும் கிடைப்பதற்கான எந்த ஒரு தீர்க்கமான பொறிமுறையும் சுதந்திரத்தின் போது ஏற்படுத்தப்படவில்லை.

இதே காலப் பகுதியிலேயே மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தினை நிலைநிறுத்தும் வகையிலான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் தோற்றமும் ஏற்பட்டது. காலனித்துவத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள் மேற்கு நாடுகளிலும், தமது பிரதேசங்களை முன்னர் காலனித்துவ ஆதிக்கத்துக்கு உட்படுத்திய நாடுகளிலும் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தங்கியிருக்க வேண்டிய ஒரு நிலைமை உருவாக்கப்பட்ட முறைமை குறித்து ஃப்ரான்ஸ் ஃபனோன் **(Frantz Fanon)** **The Wretched of the Earth** *(1961)* என்ற நூலிலே குறிப்பிடுகிறார். இந்தத் தங்கியிருப்பின் தொடர்ச்சிக்கு வழி செய்யும் வகையிலேயே சர்வதேச நிதி நிறுவனங்களின் உருவாக்கம் நோக்கப்படுகிறது. இதனையே ரிச்சாட் பீட் **(Richard Peet)** என்ற அறிஞர் "அரசியல் ரீதியான காலனித்துவநீக்கமும், பொருளாதார ரீதியிலான மீள்காலனித்துவமும்" எனத் தனது **Unholy Trinity: The IMF, World Bank and WTO** *(2003)* என்ற நூலிலே குறிப்பிடுகிறார். காலனித்துவத்தினை மேற்கொண்ட நாடுகளுக்கும், விடுதலை பெற வேண்டிய பிராந்தியங்களுக்கும் இடையில் ஒரு நீதியான உறவு, நிதி மறுபங்கீடு தேவை என்றும், வேறு பல விடயங்களை முன்னிறுத்தியும் ஏய்மி செசாயார் **(Aime Cesaire)**, லியோபோல்ட் செங்கோர் **(Leopold Senghor)** போன்ற கரீபியன், ஆபிரிக்க சிந்தனையாளர்கள் ஃ செயற்பாட்டாளர்கள் பிரெஞ்சுக் காலனியாக்கத்திக்கப் பேரரசில் இருந்து தேசிய அரசுகளாகத் தமது பிரதேசங்களை விடுவிப்பதனைக் காட்டிலும், பிரான்ஸுடன் ஒரு கண்டங்கடந்த சமஷ்டிக் கட்டமைப்பினை உருவாக்குவதே நீதியுடன் கூடிய விடுதலை என ஒரு கட்டத்திலே சிந்தித்திருந்தனர். இந்தச் சிந்தனை முறை வெற்றி அடையவிட்டாலும், இது பொருளாதாரத் தங்கியிருப்பின் அபாயங்கள் பற்றி விழிப்புணர்வு கொண்ட ஒரு பார்வையாக இன்றும் பார்க்கப்படுகிறது. இந்தப் பார்வை பற்றி கரி வைல்டர் **(Gary Wilder)** **Freedom Time: Negritude, Decolonization, and the Future of the World** *(2014)* என்ற தனது நூலிலே விரிவாக எழுதியுள்ளார்.

தங்கியிருப்பு அரசியல் பொருளாதார ரீதியில் இன்றும் பின்காலனித்துவ நாடுகளிலே ஒரு பிரச்சினையாக இருக்கிறது பல்தேசியக் கம்பனிகளுக்கும், பெரும் முதலாளிகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் சார்பானதும், பின்காலனித்துவ நாடுகளில் வாழும் உழைக்கும் மக்களையும், வறிய மக்களையும், சமூகப் பொருளாதார ரீதியாகக் காலங்காலமாக ஒடுக்கப்பட்ட தலித் மக்கள், பூர்வகுடிகள் போன்றோரினையும் மேலும் பலமிழக்கச் செய்யும் பொருளாதாரக் கொள்கைகளை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றன எம்மீது திணித்துக் கொண்டிருக்கின்றன. அரசியல் ரீதியில் பெறப்பட்ட சுதந்திரத்தினால், தொடரும் நவகாலனித்துவ, நவதாராளவாத வன்முறைகளினால் எமது சமூகங்களின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பதே உண்மை. அரசியல் இறைமை ஓர் ஏமாற்றும் தந்திரமாகவே பொருளாதார அசமத்துவம் மிக்க உலகளாவிய சூழலில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது இங்கு தெளிவாகிறது.

### அரசியல் இறமை: ஒரு வரலாற்றுச் சுருக்கம்

பின்காலனிய சூழலிலே அரசியல் இறைமை கிடைத்ததனைப் பலர் நன்மையான விடயமாகச் சுட்டுகின்றனர். ஆனால் அதனால் நன்மை பெற்றது ஒரு சிறு உயார் குழாமினரே. அரசியல் ரீதியாகப் பெறப்பட்ட இறைமையினைப் பயன்படுத்தி இந்த நாடுகள் பலவற்றிலே சிறுபான்மை இனங்களையும், மதங்களையும் சேர்ந்த மக்களும், உழைக்கும் மக்களும் ஒடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு அரசியல் இறைமையிலே எந்தப் பங்கும் இருக்கவில்லை. இதன் விளைவாக இறைமை மறுக்கப்பட்டவர்களின் இறைமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல பின்காலனித்துவ நாடுகளினுள்ளே முன்னிறுத்தப்படுகிறது.

ஆனால் இறைமை என்பது விடுதலைக்கு வழி செய்யும் ஒரு கருத்தியலா? அது உண்மையிலே மக்களை மீட்சிக்குக் கொண்டு செல்லக் கூடிய ஒரு கருத்தியலா? அது வன்முறையினையும், புறமொதுக்கல்களையும் முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய ஒரு கருத்தியலா? இந்தக் கேள்விகளை ஆராய வேண்டுமாயின் இறைமையின் வரலாற்றினையும், அதன் நிறுவன வடிவங்களில் ஒன்றான தேச அரசின் வரலாற்றினையும் நாம் அலச வேண்டியது அவசியம்.

ஐரோப்பாவிலே 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளிலே இடம்பெற்ற மத ரீதியிலான யுத்தங்களினை அடுத்து அந்தப் பிராந்தியத்திலே அமைதி இடம்பெற வேண்டும் என்பதற்காக, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலத்தினைக் கொடுத்து அமைதியினை உருவாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட வெஸ்ட்ஃபாலியா உடன்படிக்கையின் வாயிலாகத் தோற்றம் பெற்ற ஒரு கருத்தே இறைமை. இது நிலப்பரப்பின் மீதான உரிமை சார்ந்த ஒரு கருத்து. ஒவ்வொருவரும் தமது இறைமைக்குரிய நில எல்லையினை விட்டு வெளிச் செல்லக் கூடாது மற்றையவரின் எல்லைக்குள் நுழைந்து பிரச்சினைகளை விளைவிக்கக் கூடாது என்ற நடைமுறையே இங்கு முன்னிறுத்தப்பட்டது. சமயரீதியிலான வேறுபாடுகளுக்கு முன்னால், இணைந்து ஒருமித்த முறையில் சகவாழ்வு வாழ முடியாத தோற்றுப் போன ஐரோப்பியர்கள் ஒருவரை ஒருவர் கொல்லுவதனை நிறுத்தி, அமைதியாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் உருவாக்கப்பட்ட முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறையே இறைமை. 18ஆம் நூற்றாண்டிலே தேச அரசுகளின் பேரெழுச்சியுடன் இந்தக் கருத்தியல் மேலும் பலம்பெற்றதுடன் அது ஒரு கூட்டுரிமை சார் விடயமாகப் பின்வந்த காலத்தில் முன்னிறுத்தப்பட்டது.

ஐரோப்பாவிலே இறைமை என்ற கருத்து உருவாக்கப்பட்டதன் பின்னர், எதிர்பார்க்கப்பட்டது போல அன்றி, இறைமையின் பெயரினால் தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற்றன. தேச அரசுகளின் எல்லைக்குள் வாழ்ந்த தேசம் சாராத மக்கள், அல்லது சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களையும், இன அழிப்பினையும், இனச் சுத்திகரிப்பினையும் எதிர்கொண்ட வரலாறே இறைமையுடன் சார்ந்து எழுச்சி பெற்ற ஐரோப்பிய நவீனத்துவத்தின் வரலாறாகவும் இருக்கிறது. இந்த வரலாற்றின் உச்சமான வெளிப்பாடே 20ஆம் நூற்றாண்டிலே ஜேர்மனியிலே யூத மக்கள் நாசிகளினால் படுகொலை செய்யப்பட்டமை. இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு என்பவற்றுக்கு அப்பால், ஒரு நாட்டுப் பிரஜைகளை சட்ட ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் வெவ்வேறுபட்ட அந்தஸ்த்துக்குரியவர்களாக உருவாக்குவதும், நிலைநிறுத்துவதும் இறைமை அரசியலின் ஏனைய ஒடுக்கும், புறமொதுக்கும் வடிவங்களாக அமைந்தன.

ஐரோப்பாவினுள் நிலப்பரப்பு சார் இறைமையினை உருவாக்கி விட்டு, அதே காலப் பகுதியிலே ஐரோப்பிய அரசுகள் தமக்கு எந்த விதத்திலும் தொடர்பற்ற இன்று நாம் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கக் கண்டங்கள் என்று சொல்லும் பிராந்தியங்களை ஆக்கிரமித்து அங்கு வாழும் மக்களை இனவழிப்புச் செய்து, அவர்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்த வளங்களைச் சுரண்டி, தமது பலத்தினைத் தமக்குரிய பிராந்தியங்களுக்கு அப்பாலும் நிலைநிறுத்திக் கொண்டனர். இது இறைமையின் வன்முறையின் மற்றொரு வடிவம் அதன் வெளியக வடிவம். ஐரோப்பாவுக்கு வெளியில் வாழ்ந்த மக்கள் இறைமையற்றவர்கள் எனவே அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என ஐரோப்பியக் காலனித்துவவாதிகள் சிந்தித்திருக்கின்றனர் என்பதனையே இந்த வன்முறைகள் வெளிக்காட்டுகிறது. அமெரிக்காவின் பூர்வக் குடிகளின் படுகொலையும், அமெரிக்காவில் ஏற்பட்ட குடியேற்றக் காலனியாதிக்கமும் இந்தச் சிந்தனையின் அடிப்படையிலேயே உருவாகின.

### பின்காலனிய நாடுகளும் இறைமையும்

நவீனத்துவ காலத்திலே ஐரோப்பாவில் ஏற்பட்ட வன்முறைக்குத் தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்பட்ட, ஆனால் முரண்நகையாக வன்முறையினை ஐரோப்பாவிலும், வெளியிலும் தொடர்ந்தும் உருவாக்கிய ஒரு கருத்தியலே இறைமை. இந்தக் கருத்தியல் காலனித்துவத்துக்கு பிந்தைய காலத்திலே காலனித்துவத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலே விடுதலைக்குரிய ஒரு கருத்தியலாக பார்க்கப்படுகின்றமை பின்காலனித்துவத்தினால் வரலாற்றுப் புரிதலற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட ஐரோப்பிய நவீனத்துவத்தின் ஓர் இறக்குமதி என்றே சொல்ல வேண்டி இருக்கிறது. மஹ்மூட் மம்தானி **(Mahmood Mamdani)** இதனை பின்காலனித்துவ நவீனத்துவம் எனத் தனது மிக அண்மைய நூலான **Neither Settler Nor Native: The Making and Unmaking of Permanent Miniroties** *(2020)* இலே குறிப்பிடுகிறார்.

இறைமையின் உலகமயமாக்கம் ஐக்கிய நாடுகளின் உருவாக்கத்தின் பின்னர் சுயநிர்ணய உரிமை என்ற பெயரில் 20ஆம் நூற்றாண்டிலே சர்வதேச சட்டங்களின் மூலம் உறுதிபெற்றது. வெவ்வேறு காலங்களிலே தாராளவாதிகள், இனவாதிகள், மதவாதிகள், இடதுசாரிகள், பாசிசவாதிகள், காலனித்துவ எதிர்ப்புவாதிகள், சர்வதேச சட்டத் துறையில் ஈடுபடுவோர், கல்விசார் புலமையாளர்கள் என எல்லாத் தரப்பினரும் அங்கீகரித்த ஐரோப்பிய நவீனத்துவத்தின் துயரமே நிலப்பரப்பு சார் இறைமை என்ற கோட்பாடு. இந்தக் கோட்பாட்டின் போதாமைகளையும், வன்முறைகளையும் கேள்விக்குட்படுத்தும் போக்கு இப்போது மஹ்மூட் மம்தானி, நந்திதா ஷர்மா **(Nandita Sharma – Home Rule: National Sovereignty and the Separation of Natives and Migrants** *(2020))* போன்றவர்களின் வரலாற்று ரீதியான எழுத்துக்களிலே உறுதியான முறையிலே வெளிப்படுகிறது.

பின்காலனித்துவ நாடுகளிலே பலவற்றிலே யார் நாட்டின் நிலப்பரப்புக்குச் சொந்தமானவர்கள், உள்ளக ரீதியாக யார் எந்த நிலத்துக்கு இறைமை உடையவர் என்ற போட்டிகளும், போர்களுமே பின்காலனியக் காலத்திலே எழுச்சி பெற்றன. காலனியக் காலத்திலே உருவாக்கப்பட்ட அல்லது கூர்மைப்படுத்தப்பட்ட இன ரீதியிலான அடையாள வேறுபாடுகளும், நிலங்களை மொழி, இன அடிப்படையில் பிரிக்கும் காலனித்துவ நிருவாக முறைமைகளும் இந்த எழுச்சிக்கான அடித்தளங்களாகவும் அமைந்தன. சுதந்திரத்தின் பின்னர் இந்த நாடுகளை சகவாழ்வுக்குரிய கூட்டிணைவுகளாகச் சிந்திக்காமல், குறித்த இனங்களின், மதக்குழுவினரின் இறைமைக்கான பிராந்தியங்களாக, ஐரோப்பிய நவீனத்துவத்தின் பாணியிலே, அங்கு வாழ்ந்த ஏனைய இனங்களைப் புறமொதுக்கும் வகையிலே சிந்தித்தமையே இந்த நாடுகளிலே இனவழிப்புக்களும், இனச்சுத்திகரிப்புக்களும் மேலோங்கியமைக்குக் காரணமாகியது. இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினையின் போது மேற்கொள்ளப்பட்ட கொலைகள், ருவாண்டாவில் ஏற்பட்ட இனப் படுகொலை போன்றன ஐரோப்பாவுக்கு வெளியே நிலப்பரப்பு சார் இறைமைச் சிந்தனையின் விளைவாக மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இறப்புக்குக் காரணமான வன்முறைகளாக அமைந்தன. தாம் வாழும் அரசுகளினது இனவழிப்பிலே இருந்தில் விடுதலை பெறப் போராடிய பின்காலனித்துவ சமூகங்கள் கூட இந்த ஐரோப்பிய நவீனத்துவத்தின் பாணியிலேயே தமது விடுதலையினை கற்பனை செய்தார்கள். நாம் இன்று வாழும் பிராந்தியங்களிலே ஐரோப்பியர் வரு கைக்கு முன்னர் எம் மூதாதையிரிடம் இறைமை இருந் தது என, இறைமை என்ற கருத்தியலின் ஐரோப்பிய ஊற் றுக்களைக் கூட விளங்கிக்கொள்ளாது, நாம் திரும்பத் திரும்பச் சொல்லுவதும், எமது பிரதேசங்களில் ஐரோப்பியக் காலனித்துவத்தின் முன்னர் இருந்த இரசதானிகளையும் (உதாரணம்: யாழ்ப்பாண இராசதானி), பேரரசுகளையும் (உதாரணம்: சோழப் பேரரசு) இறைமை மிக்க பண்டைய தேசங்கள் என நாம் வரலாற்றினைப் புறமொ துக்கி விபரிப்பதும் ஐரோப்பிய நவீனத்தவ சிந்தனை யின் அடிப்படையில் எம்மத்தியிலே எழுச்சி பெற்ற கடந்த காலம் பற்றிய பின்காலனித்துவக் கற்பனையின் வடிவங்களே. நாம் சிறுவர்களாக இருக்கும் போதில் இருந்து வரலாறு என்ற பெயரில் இந்தக் கற்பனை எம் மீது உட்பகுத்தப்படுவதனையும், தேசிய விழாக்கள், அரசியற் தலைவர்களின் பேச்சுக்கள், நாவல்கள், திரைப் படங்கள், தொலைக் காட்சித் தொடர்கள் போன்றன இந்தக் கற்பனையினை நாளாந்தம் மீளுருவாக்கி வருவ தனையும் பார்த்தாச்

(16ம் பக்கம் பார்க்க)

# வான், கடல் எல்லைகளை கண்காணிக்க நவீன கருவி அமெரிக்கா வழங்குகிறது

கொழும்பு, பெப். 05

நாட்டின் வான், கடல் தேச எல்லைகளை கண்காணிக்கக் கூடிய அதிநவீன கண்காணிப்பு கட்டமைப்பை இலங்கைக்கு வழங்க அமெரிக்க முன்வந்துள்ளது.

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் ஊடான நபர்களின் வருகைகளை கண்காணிப்பது போன்று, வான் மற்றும் கடல் எல்லைகளில் மீதான மீறல்கள் மற்றும் ஊடுருவல்களை இந்த நவீன கண்காணிப்பு கட்டமைப்பு ஊடாக உடனடி தகவல்களை பெற முடியும்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பாதுகாப்பு துறைசார்ந்த அதிகாரிகளுக்கும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போதே குறித்த எல்லை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பை இலங்கைக்கு வழங்க அமெரிக்க அதிகாரிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த எல்லை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பை இலங்கைக்கு இலவசமாக வழங்குவது குறித்து இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமெரிக்கா வழங்கவுள்ள உத்தேச பாதுகாப்பு கண்காணிப்பு கட்டமைப்பின் ஊடாக இலங்கைக்குள் நுழையும் அல்லது வெளியேறும் அனைத்து நபர்கள் தொடர்பிலும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். அதே போன்று உலகளாவிய தீவிரவாத செயல்பாடுகளுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய குழுக்கள் தொடர்பான தகவல்கள் இந்த கண்காணிப்பு கட்டமைப்புக்குள் காணப்படுகின்றமையால் அவர்கள் இலங்கை எல்லையை எவ்வழியில் கடந்தாலும் கண்காணிக்க முடியும்.

மேலும் ஏதேனும் குற்றம் புரிந்து நாட்டை விட்டு தப்பித்து செல்ல முற்படுபவர்களையும் இந்த கண்காணிப்பு கட்டமைப்பின் ஊடாக அடையாளம் காண முடியும். எவ்வறாயினும் அமெரிக்கா இலங்கைக்கு வழங்க உத்தேசித்துள்ள குறித்த அதி நவீன எல்லை பாதுகாப்பு கண்காணிப்பு கட்டமைப்பை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. (ஐ)

## சுதந்திரத்தினைக் காலனித்துவ நீக்கம்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டர்ஜி **(Partha Chatterjee) The Truths and L ies of Nationalism** *(2022)* என்ற நூலிலே விபரிக்கிறார்.

**சுதந்திரத்தினைக் காலனி நீக்கம் செய்தல்**

இலங்கையினை ஐரோப்பிய நவீனத்துவத்தின் பாணியில் ஒரு குறித்த மக்களிற்கு உரிய பிராந்தியமாகச் சிந்தித்தமையின் விளைவே சிங்கள பௌத்த ரீதியில் இந்தத் தீவில் தமிழர்கள் மீதும் ஏனைய சிறுபான்மை மக்களின்

மீதும் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புச் செயன்முறைகள். ஆனால் இந்த இனவழிப்பின் பிடியில் இருந்து தப்பிப்பதற்காக ஐரோப்பிய நவீனத்துவத்தின் பாணியிலி லேயே தமிழ்த் தேசியம் கற்பனை செய்யப்பட்டது. அதுவே விடுதலையின் வடிவமாக முன்னிறுத்தப்பட்டது. அந்தக் கற்பனையின் ஒரு வன்முறை விளைவாகவே 1990இலே முஸ்லிம் மக்கள் வடபகுதியில் இருந்து இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டனர்.

நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்று ஒவ்வோரு சுதந்திரத் தினத்திலும் கூறினாலும், நாம் பெற்ற சுதந்திரம் பொருளாதார ரீதியில் மேற்கு நாடுகளினதும், பெரும் முதலாளிகளினதும் ஆதிக்கத்திலே தங்கியிருப்பதனையும், அரசியல் ரீதியிலே ஐரோப்பிய நவீனத்துவத்தின் வன்முறையான வடிவங்களுக்கு ஊடாகக் கட்டப்பட்டிருப்பதனையுமே நாம் காண்கிறோம்.

நாம் இன்னும் சுதந்திரம் பெறவில்லை என்று, சுதந்திர தினத்தினைக் கரிநாள் என அழைப்பவர்களும் கூட வன்முறை மிக்க ஐரோப்பிய நவீனத்துவம் தமது சமூகங்களிலே நிறுவன ரீதியாக நிலைபெறுவதனையே தமது விடுதலையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதுவே அவர்களின் எதிர்ப்பின் குரலாகவும் அமைந்து விடுகின்றமை பின்காலனித்துவத்தின் ஒரு வரலாற்றுத் துன்பியல். விடுதலை அரசியலிலே இறைமைக்கும், இன, மத, அடையாள ரீதியிலான தேசியங்களுக்கும் அப்பால் சென்று எம்மால் விடுதலை பற்றி சிந்திக்க முடியாமல் இருக்கின்றமையையே நாம் எம்மைச் சுற்றிக் காண்கிறோம்.

சுதந்திர தினத்திலே ஐரோப்பியக் காலனித்துவத்தின் வன்முறைகளைப் பற்றிப் பேசுவதும், சிங்கள பௌத்த இனவாதத்தின் வன்முறைகளை எதிர்ப்பதுவும் மாத்திரம் போதாது. விடுதலை என்ற இலட்சியத்தினை இனவழிப்புக்கும், இனச் சுத்திகரிப்புக்கும் வித்திடும் ஐரோப்பிய பாணி நவீனத்துவச் சிந்தனை முறையில் இருந்தும், அதனது அரசியற் கட்டமைப்புக்களிடம் இருந்தும் விடுதலை செய்வது எப்படி என்றும் சிந்திக்க வேண்டியது அவசியம். இன்னொரு வகையிலே சொன்னால் சுதந்திரத்தினை நாம் காலனித்துவ நீக்கம் செய்ய வேண்டும். அப்போது விடுதலை ஒரு பிரதேசத்தில் வாழும் எல்லாரினையும் உள்வாங்கிய, சமூக நீதியினையும், நீதியான மீள்பங்கீட்டினையும் வலியுறுத்திய இலட்சியமாகப் பரிணமிக்கும். இல்லாவிட்டால் ஐரோப்பிய நவீனத்துவம் ஒரு நச்சுவட்டமாக எம்மத்தியில் வன்முறையினை மீண்டும் மீண்டும் உருவாக்கிக் கொண்டே இருக்கும். ●



